09.06.15

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை

தினமணி

நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**மானிய விலை வைக்கோல் வழங்கும் திட்டம் தொடக்கம்**

மதுராந்தகம் கோட்ட கால்நடை பராமரிப்புத் துறை சார்பில், மானிய விலை வைக்கோல் வழங்கும் திட்டத் தொடக்க விழா புக்கதுறை கால்நடை மருந்தகத்தில் அண்மையில் நடைபெற்றது.

மதுராந்தகம் கால்நடை பராமரிப்புத் துறை உதவி இயக்குநர் (பொ) டாக்டர் டி.நாகரத்தினம் வரவேற்றார். மதுராந்தகம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையின் தலைவர் கோ.அப்பாதுரை முன்னிலை வகித்தார். காஞ்சிபுரம் கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இயக்குநர் டாக்டர் பன்னீர்செல்வம் திட்ட விளக்கவுரை ஆற்றினார்.

சிறப்பு விருந்தினராக மதுராந்தகம் எம்எல்ஏ கணிதா சம்பத் கலந்து கொண்டு மானிய விலையில் வைக்கோல் வழங்கும் திட்டத்தைத் தொடக்கி வைத்தார். நிகழ்ச்சியில், மதுராந்தகம் ஊராட்சி ஒன்றியத் தலைவர் வள்ளி அப்பாதுரை, ஓய்வு பெற்ற உதவி இயக்குநர் ஏ.அம்பேத்கர், மதுராந்தகம் கால்நடை பராமரிப்புத் துறை உதவி இயக்குநர் டி.நாகரத்தினம், மருத்துவர்கள் விஜயகுமார், மதியழகன், மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் சிவசங்கரன், ஊராட்சி மன்றத் தலைவர் கே.ஜி.ரவி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

புக்கதுறை கால்நடை உதவி மருத்துவர் எம்.ராஜாமுகமது நன்றி கூறினார்.

**மேகி நூடுல்ஸ் விற்பனைக்கு ஒடிஸா அரசு தடை**

ஒடிஸாவில் மேகி நூடுல்ஸ் விற்பனைக்கு உடனடியாக தடை விதிப்பதாக மாநில அரசு திங்கள்கிழமை அறிவித்தது.

இந்த அறிவிப்பை புவனேசுவரத்தில் திங்கள்கிழமை வெளியிட்ட மாநில சுகாதார, குடும்ப நலத் துறை அமைச்சர் அதானு சப்யசாச்சி நாயக், மாநிலத்தில் இருந்து மேகி நூடுல்ஸ்ப்கள் அனைத்தையும் உடனடியாகத் திரும்பப் பெற்றுக் கொள்ளுமாறு அதன் தயாரிப்பாளரான நெஸ்லே இந்தியா நிறுவனத்தைக் கேட்டுக் கொண்டார். இது தொடர்பாக அவர் செய்தியாளர்களிடம் மேலும் கூறியதாவது: புணேவில் இருக்கும் மத்திய உணவுப் பரிசோதனைக் கூடத்தில் மேகி உணவுப் பொருள்கள் மாதிரிகளை ஆய்வுக்கு உட்படுத்தியதில், மேகி நூடுல்ஸ்களில் அனுமதிக்கப்பட்ட அளவைவிட கூடுதலாக மோனோசோடியம் குளுட்டாமேட் கலந்திருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர ஆணையம் குறிப்பிட்டுள்ளபடி, மோனோசோடியம் குளுட்டாமேட் அதிகம் கலந்திருக்கும் உணவுப் பொருள்கள் உடல் ஆரோக்கியத்துக்கு மிகவும் கேடு விளைவிக்கும் என்பதால் இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது. மேகி உணவுப் பொருள்களின் விற்பனைக்கு முழுமையான தடை விதிக்கப்பட்டிருப்பதை கண்காணிக்குமாறு மாவட்ட ஆட்சியர்களுக்கு உரிய உத்தரவு வழங்கப்பட்டிருக்கிறது என்றார் அமைச்சர் நாயக்.

**அடுத்த 24 மணி நேரத்தில் தமிழகம், புதுச்சேரியில் ஒரு சில இடங்களில் மழை பெய்யும்**

தமிழகம், புதுச்சேரியில் அடுத்த 24 மணி நேரத்தில் ஒரு சில இடங்களில் மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரி ஒருவர் கூறியதாவது: வெப்ப சலனம் காரணமாக, தமிழகத்தில் ஆங்காங்கே மழை பெய்து

வருகிறது. இந்த நிலையில் செவ்வாய்க்கிழமையும் தமிழகம், புதுச்சேரியில் ஒரு சில இடங்களில் மழை பெய்யும். கடந்த 24 மணி நேரத்தில், நீலகிரி மாவட்டம் ஜி.பஜாரில் 40 மி.மீ, கிருஷ்ணகிரி மாவட்டம் தளியில் 30 மி.மீ, ஈரோடு மாவட்டம் தாளவாடி, கன்னியாகுமரி மாவட்டம் பேச்சிப்பாறையில் 20 மி.மீட்டர் மழை பதிவாகியுள்ளது. தக்கலை, மயிலாடி, தேவலா, குளித்துறை, வால்பாறை தாலுகா அலுவலகம், நாகர்கோவில் ஆகிய இடங்களில் தலா 10 மி.மீட்டர் மழை பதிவாகியுள்ளது. சென்னை மாநகரைப் பொருத்தமட்டில், வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவு நேரத்தில் இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச, குறைந்தபட்ச வெப்பநிலை முறையே 102, 84 டிகிரி ஃபாரன்ஹீட் ஆக இருக்கும். அரபிக் கடலில் உருவான குறைந்த காற்றழுத்த பகுதியானது, அடுத்த 36 மணி நேரத்தில் கடும் புயலாக மாறும் வாய்ப்புள்ளது. இந்தப் புயலால் தமிழகத்துக்கு எந்தவிதப் பயனும், பாதிப்பும் கிடையாது என்றார் அவர்.

**குறுவை நெல் சாகுபடிக்கு விதை, உரம் கையிருப்பு**

தேனி மாவட்டத்தில் குறுவை நெல் சாகுபடிக்கு விதை நெல் மற்றும் உரம் கூட்டுறவு வங்கிகள் மற்றும் வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களில் போதிய அளவில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது என்று மாவட்ட விவசாயத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இது குறித்து அவர்கள் கூறியது: பெரியாறு அணையில் இருந்து கடந்த ஜூன் 2-ஆம் தேதி குறுவை நெல் சாகுபடிக்கு தண்ணீர் திறக்கப்பட்டு, கம்பம் பள்ளத்தாக்கில் நாற்றங்கால் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. குறுவை நெல் சாகுபடியை தொடர்ந்து சிறு தானியங்கள், பயறு வகை பயிர்கள், எண்ணெய் வித்துப் பயிர்கள் சாகுபடிக்கும் ஆயத்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன. நெல் மற்றும் பயறு வகை

சாகுபடிக்குத் தேவையான சான்று பெற்ற விதைகள் மாவட்டத்துக்கு உள்பட்ட தொடக்க கூட்டுறவு வேளாண்மை வங்கிகள் மற்றும் வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களில் போதிய அளவில் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. நெல் விதை ரகங்கள் ஏ.டி.டி.,45, ஏ.டி.டி.,39, என்.எல்.ஆர்.,3449 ஆகியவை 165 டன், சிறு தானியங்கள் 7,600 டன், பயறு வகைகள் 25 ஆயிரத்து 200 டன், எண்ணெய் வித்து பயிர்கள் 4 டன் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. ரசாயன உரங்களான யூரியா கூட்டுறவு வங்கிகளில் 911 டன், தனியார் உரக் கடைகளில் 506 டன், டி.ஏ.பி., கூட்டுறவு வங்கிகளில் 222 டன், தனியார் கடைகளில் 203 டன், பொட்டாஷ் கூட்டுறவு வங்கிகளில் 476 டன், தனியார் கடைகளில் 301 டன், காம்ப்ளக்ஸ் உரம் கூட்டுறவு வங்கிகளில் 533 டன், தனியார் கடைகளில் 1,004 டன் இருப்பு வைக்கப்பட்டுள்ளன என்றனர்.

**மெட்ரோ நெசவாளர் கூட்டுறவுச் சங்க விற்பனை நிலையம் திறப்பு**

சென்னிமலை மெட்ரோ கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்க புதிய விற்பனை நிலைய திறப்பு விழா திங்கள்கிழமை நடைபெற்றது.

இவ்விழாவுக்கு, சென்னியங்கிரி வலசு தொடக்க வேளாண்மை கடன் சங்கத் தலைவர் சிவசுப்பிரமணியம் தலைமை வகித்தார். மெட்ரோ டெக்ஸ் தலைவர் கந்தசாமி வரவேற்றார். காங்கயம் சட்டப்பேரவை உறுப்பினர் என்.எஸ்.என்.நடராஜ், புதிய விற்பனை நிலையத்தை திறந்து வைத்தார்.

இதில், சென்னிமலை ஒன்றியத் தலைவர் கருப்புசாமி, மெட்ரோ டெக்ஸ் மேலாண்மை இயக்குநர் தியாகராஜன், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி இயக்குநர் சேமலையப்பன், சென்னிமலை பேரூராட்சித் தலைவர் சண்முகசுந்தரம் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

மெட்ரோ டெக்ஸ் துணைத் தலைவர் வெள்ளியங்கிரி நன்றி கூறினார். விழாவுக்கான, ஏற்பாடுகளை இயக்குநர்கள், மேலாளர் சேகர், பணியாளர்கள் ஆகியோர் செய்திருந்தனர்.

**அரசு பழங்குடியினர் பள்ளியில் சுற்றுச் சூழல் தினம்**

கூடலூரை அடுத்துள்ள தொரப்பள்ளி அரசு பழங்குடியினர் உண்டு உறைவிட நடுநிலைப் பள்ளியில், உலக சுற்றுச் சூழல் தினம் திங்கள்கிழமை கொண்டாடப்பட்டது. கூடலூர் நகராட்சியும், எக்ஸ்னோரா அமைப்பும் இணைந்து நடத்திய இந்நிகழ்ச்சிக்கு, பள்ளித் தலைமை ஆசிரியர் கலாவதி தலைமை வகித்தார். இதில், சுற்றுச் சூழலை பாதுகாப்பதன் அவசியம் குறித்து விளக்கமளிக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், நகராட்சி ஆணையர் ஓ.ராஜாராம், நகர்மன்றத் தலைவர் ரமாமணி, நகர்மன்ற உறுப்பினர்கள், பள்ளி மாணவ, மாணவிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**"வேளாண் கூட்டுறவுச் சங்கங்களில் சான்றிதழ்களைப் பெறலாம்**

திருவண்ணாமலை மாவட்ட தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களில், வருவாய்த் துறை மூலம் பெறப்படும் அனைத்துச் சான்றிதழ்களையும் பெற்றுப் பயன்பெறலாம் என்று மாவட்ட ஆட்சியர் அ.ஞானசேகரன் தெரிவித்தார். திருவண்ணாமலை மாவட்டத்தில் மின் ஆளுமைத் திட்டத்தின் மூலம் வழங்கப்படும் ஜாதி சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ், வருமானச் சான்றிதழ், முதல் பட்டதாரி சான்று, கணவனால் கைவிடப்பட்டோர் சான்றிதழ், சமூக நலத் துறையால் வழங்கப்படும் திருமண உதவித் தொகைக்கு விண்ணப்பிக்க மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்களில் இயங்கும் அரசு பொது மின் சேவை மையங்கள், ஆட்சியர் அலுவலகத்தில் இயங்கும் எல்காட் நிறுவனத்தின் அரசு பொது மின் சேவை மையம் ஆகியவற்றில்

விண்ணப்பித்துப் பயன்பெறலாம் என்று ஏற்கெனவே அறிவிக்கப்பட்டு இருந்தது.

இருப்பினும், வட்டாட்சியர் அலுவலகங்களில் ஏற்படும் கூட்ட நெரிசலைத் தவிர்க்க மாவட்டத்தில் உள்ள தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களில் இயங்கும் மக்கள் கணினி மையங்களில் பொதுமக்கள் மனு செய்து பயன்பெறலாம் என்று மாவட்ட ஆட்சியர் அ.ஞானசேகரன் தெரிவித்துள்ளார்.

அதன்படி, திருவண்ணாமலை வட்டத்தில் வேங்கிக்கால், கீழ்நாத்தூர், வேட்டவலம், ஆவூர், கீழ்பென்னாத்தூர், சிறுநாத்தூர், சோமாசிபாடி, தச்சம்பட்டு, நாயுடுமங்கலம் தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்களை அணுகலாம். இதேபோல, செங்கம் வட்டத்தில் செங்கம், செ.நாச்சிப்பட்டு, மேல்புழுதியூர், காஞ்சி பகுதிகளில் உள்ள தொடக்க வேளாண் கூட்டுறவுக் கடன் சங்கங்களையும், தண்டராம்பட்டு வட்டத்தில் தண்டராம்பட்டு, சாத்தனூர், வானாபுரம், ரெட்டியார்பாளையம், தானிப்பாடி பகுதிகளில் உள்ள தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களையும், போளூர் வட்டத்தில் போளூர், சந்தவாசல், மாம்பட்டு, களம்பூர் தொடக்க வேளாண் கூட்டுறவுக் கடன் சங்கங்களையும் பொதுமக்கள் அணுகலாம். இதேபோல, கலசப்பாக்கம் வட்டத்தில் கலசப்பாக்கம், கேட்டவரம்பாளையம், வீரளூர், கடலாடி பகுதிகளில் உள்ள தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்களையும், ஆரணி வட்டத்தில் கண்ணமங்கலம், எஸ்.வி.நகரம், சேவூர், அரையாளம் பகுதி வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களையும், சேத்துப்பட்டு வட்டத்தில் சேத்துப்பட்டு, தேவிகாபுரம், கொழப்பலூர் வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களை அணுகலாம். வந்தவாசி வட்டத்தில் வந்தவாசி, அன்மருதை, தேசூர், மழையூர், கீழ்கொடுங்காலூர் பகுதி வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்கள், செய்யாறு வட்டத்தில் திருவத்திபுரம், அனக்காவூர், பல்லி பகுதிகளின் வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களையும், வெம்பாக்கம்

வட்டத்தில் வெம்பாக்கம், தூசி வேளாண் கூட்டுறவுக் கடன் சங்கங்களையும் அணுகலாம் என்று ஆட்சியர் அ.ஞானசேகரன் தெரிவித்துள்ளார்.

**தொடர்ந்து நான்காம் ஆண்டாக குறுவை சாகுபடியை இழக்கும் டெல்டா விவசாயிகள்**

காவிரி நீர் வரத்து இல்லாததால் டெல்டா மாவட்டங்களில் உள்ள விவசாயிகள் தொடர்ந்து நான்காம் ஆண்டாக குறுவை சாகுபடியை இழக்கின்றனர்.

டெல்டா மாவட்டங்களில் குறுவை பருவ நெல் சாகுபடியின் இயல்பான பரப்பளவு ஏறத்தாழ 1.15 லட்சம் ஹெக்டேர். மேட்டூர் அணை ஜூன் 12ஆம் தேதி முதல் திறந்தால் மட்டுமே இந்தப் பரப்பளவை எட்டுவதற்கு வாய்ப்பாக இருக்கும். ஆனால் பெரும்பாலான ஆண்டுகளில் குறுவை பருவத்தில் காவிரி நீர் வரத்து இருக்காது என்பதால், டெல்டா மாவட்டங்களில் நெல் சாகுபடி கைவிடப்படும். நிலத்தடி நீர் ஆதாரமும், ஆழ்துளை குழாய் வசதியும் உடைய விவசாயிகள் மட்டுமே குறுவை சாகுபடி மேற்கொள்வர். எனவே, காவிரி நீர் வரத்து இல்லாத காலத்தில் சுமார் 60,000 ஹெக்டேரில் மட்டுமே குறுவை சாகுபடி மேற்கொள்ள இயலும்.

கடந்த 5 ஆண்டுகளில் 2011 ஆம் ஆண்டு காவிரி நீர் வரத்து இருந்ததால் இயல்பான பரப்பளவை விஞ்சி குறுவை சாகுபடி மேற்கொள்ளப்பட்டது. அதன் பிறகு குறுவை பருவத்தில் காவிரி நீர் வரத்து இல்லாததால் 2012-ல் சுமார் 51,000 ஹெக்டேரிலும், 2013-ல் 69,379 ஹெக்டேரிலும், 2014-ல் ஏறத்தாழ 86,000 ஹெக்டேரிலும் மட்டுமே நெல் சாகுபடி மேற்கொள்ள முடிந்தது.

நிகழாண்டும் மேட்டூர் அணையில் போதுமான அளவுக்கு நீர்மட்டம் இல்லாததால் குறுவை பாசனத்துக்கு மேட்டூர் அணையிலிருந்து ஜூன்

12ஆம் தேதி தண்ணீர் திறந்துவிட வாய்ப்பில்லை என அரசு அண்மையில் அறிவித்தது. இதன் காரணமாக நிகழாண்டும் டெல்டா மாவட்டங்களில் பெரும்பாலான விவசாயிகள் குறுவை சாகுபடியைக் கைவிட்டுள்ளனர்.

கோடை மழை இயல்பான அளவை விஞ்சி பெய்ததால் ஆழ்துளை குழாய் வசதியுள்ள விவசாயிகள் முன்பட்ட குறுவை சாகுபடியைத் தொடங்கி மேற்கொண்டு வருகின்றனர். ஆனால் காவிரி நீர் வரத்து இல்லாததால் குறுவை சாகுபடியில் விறுவிறுப்பு இல்லை. இதுவரை தஞ்சாவூர் மாவட்டத்தில் 6,570 ஹெக்டேரிலும், திருவாரூர் மாவட்டத்தில் 1,100 ஹெக்டேரிலும், நாகை மாவட்டத்தில் 14,000 ஹெக்டேரிலும் மட்டுமே நடவுப் பணிகள் நிறைவடைந்துள்ளன.தமிழக அரசின் குறுவை தொகுப்பு உதவித் திட்டம் கடந்த 2 ஆண்டுகளாகச் செயல்படுத்தப்படுவதால் குறுவை சாகுபடிப் பரப்பு அதிகரித்தது. அதுபோல நிகழாண்டும் இருக்கும் என்ற எதிர்பார்ப்பு வேளாண் துறையினர் மத்தியில் நிலவுகிறது.

எனவே, நிகழ் குறுவை சாகுபடியில் தஞ்சாவூர் மாவட்டத்தில் 30,000 ஹெக்டேரிலும், திருவாரூர் மாவட்டத்தில் 26,000 ஹெக்டேரிலும், நாகை மாவட்டத்தில் 28,000 ஹெக்டேரிலும் என மொத்தம் 84,000 ஹெக்டேரில் மேற்கொள்ள வேளாண் துறையினர் இலக்கு நிர்ணயித்துள்ளனர். ஆனால், பல இடங்களில் நிலத்தடி நீர்மட்டம் குறைந்துவிட்டதால், ஆழ்துளைக் குழாய் பாசனப் பகுதியிலும் குறுவை சாகுபடி செய்வதற்கு விவசாயிகள் மத்தியில் தயக்கம் நிலவுகிறது.

இதுகுறித்து மூத்த வேளாண் வல்லுநர் பி. கலைவாணன் தெரிவித்தது: காவிரி, வெண்ணாற்றுப் பாசனப் பகுதிகளில் நிலத்தடி நீர்மட்டம் மிகவும் குறைந்துவிட்டது. திருவிடைமருதூர், நீடாமங்கலம், நன்னிலம் வரையிலும் நிலத்தடியில் கடல் நீர் வந்துவிட்டது. இந்தச் சூழ்நிலையில்

குறுவை சாகுபடி செய்தால் உவர் நீர் தான் வரும். எனவே, நெல் சாகுபடிக்குப் பதிலாக பயறு வகைப் பயிர்கள் சாகுபடி செய்தால் நல்லது என அவர் தெரிவித்தார். நிகழாண்டும் வடகிழக்குப் பருவமழையை நம்பியே டெல்டா மாவட்டங்கள் இருப்பதால், ஒரு போகமான சம்பா சாகுபடி மட்டுமே மேற்கொள்ள முடியும் என்ற நிலை உள்ளது. பருவமழை கைக்கொடுத்தால் மட்டுமே சம்பா சாகுபடியில் இலக்கை எட்டுவது சாத்தியம்.

**வேளாண்மை வளர்ச்சி திட்டப் பணிகள் ஆய்வு**

பெரம்பலூர் மாவட்டத்தில் வேளாண்மைத் துறை மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை மாவட்ட ஆட்சியர் (பொ) ப. மதுசூதன் ரெட்டி சனிக்கிழமை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வில், வேப்பந்தட்டை வட்டாரத்தில் வேளாண்மை பொறியியல் துறை மூலம் அன்னமங்கலம் கிராமத்தில் ரூ. 1.25 லட்சம் மான்யத்துடன் ரூ. 1.68 லட்சம் மதிப்பிலான சொட்டு நீர்ப் பாசன கருவிகள் அமைக்கப்பட்டு மரவள்ளிக் கிழங்கு பயிரிடப்பட்டிருப்பதைப் பார்வையிட்டார். பின்னர், நடப்பாண்டில் ரூ. 1.84 லட்சம் மான்யத்தில் ரூ. 3.97 லட்சம் மதிப்பீட்டில் காய்கறி மற்றும் பழவகைகளை உலர்த்த பயன்படும் சூரிய கூடார உலர்த்தியின் பயன்பாடு குறித்து கேட்டறிந்தார்.

தொடர்ந்து, ஆலத்தூர் வட்டாரம் டி. களத்தூரில் நடைபெற்று வரும் மண் பரிசோதனை முகாமை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்ட ஆட்சியர் கூறியது:

நடமாடும் மண் பரிசோதனை நிலையத்தின் மூலம் மண்ணில் உள்ள களர் மற்றும் அமிலத்தன்மை, உப்பின் தன்மை, பாஸ்பரஸ்,பொட்டாஷ்,தாமிரம்,இரும்பு, துத்தநாகம் ஆகிய சத்துகள் குறித்து விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த கையேடு வழங்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு,மண் பரிசோதனை செய்யாமல் உரமிட்டால் தேவையற்ற சத்து மண்ணிற்கு அதிகமாகக் கிடைப்பதுடன், உற்பத்தி இழப்பும் ஏற்படுகிறது.

மேலும், மண் பரிசோதனை செய்து வேளாண்மை அலுவலர்களின் ஆலோசனைப்படி பயிர் செய்வதன் மூலம் உர செலவை கட்டுப்படுத்தி அதிக லாபம் பெறலாம் என்றார் மதுசூதன் ரெட்டி.

இந்த ஆய்வின் போது, வேளாண்மை இணை இயக்குநர் (பொறுப்பு) அய்யாசாமி, வேளாண்மை பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் ராஜேந்திரன், தோட்டக்கலைத் துறை இணை இயக்குநர் இந்திரா உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

**"குறுவை சிறப்பு தொகுப்பு திட்டம் உரியோருக்கு கிடைக்க வேண்டும்'**

தமிழக அரசின் குறுவை சிறப்புத் தொகுப்புத் திட்டத்தில் உண்மையான விவசாயிகள் பயன்பெற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென விவசாயிகள் வலியுறுத்தினர். திருவாரூர் ஆட்சியரகத்தில் திங்கள்கிழமை நடைபெற்ற குறுவை சிறப்பு தொகுப்பு திட்டத்தின் செயலாக்கம் குறித்த விழிப்புணர்வு கூட்டத்தில் விவசாயிகள் பேசியது: மன்னார்குடி எஸ் ரெங்கநாதன்: வெண்ணாறு பாசன ஆற்றிலுள்ள மண்மேடுகளை அகற்ற வேண்டும். விதைகளை விதை விற்பனை நிலையங்களில் தயாராக வைத்திருக்க வேண்டும். வெ. சத்தியநாராயணன்: இத்திட்டத்தில் உண்மையான குறுவை விவசாயிகள் பயன்பெறும் வகையில் அரசு அலுவலர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். நடவு இயந்திரம் இல்லாத இடங்களில் விவசாயிகள் வாடகை இயந்திரம் பய ன்படுத்திக் கொள்ள திட்டத்தில் வழிவகை செய்ய வேண்டும்.

வரதராஜன்: மண்வளத்தை மேம்படுத்த, ஏக்கருக்கு 4 மூட்டைக்கும் மேலாக ஜிப்சம் வழங்க வேண்டும். கங்களாஞ்சேரி ராமகிருஷ்ணன்: வெண்ணாறு பகுதியில் 90%, காவிரி பாசனப் பகுதியில் 25% உப்பு

நீர்ப்பகுதியாகும். இப்பகுதிகளுக்கு இந்தத் திட்டத்தில் சலுகைகள் வழங்க வேண்டும்.

எடமேடையூர் கோதண்டராமன்: குறுவைக்கு தங்குதடையின்று மும்முனை மின்சாரம் வழங்க வேண்டும். குறைந்த விலையில் உரங்கள் வழங்க வேண்டும். நேரடி தெளிப்பு விவசாயிகளுக்கு மானியம் வழங்க வேண்டும்.

குடவாசல் சேதுராமன்: நாள்தோறும் 20 மணி நேரம் மும்முனை மின்சாரம் வழங்க வேண்டும். பேரளம் பாலகுமாரன்: பேரளம் பகுதியில் சமுதாய பம்ப்செட் அமைத்துக் கொடுத்து நாற்று தயாரிக்க உதவி செய்ய வேண்டும்.

வலங்கைமான் ஜி. சுந்தரமூர்த்தி: திட்டத்தில் அரசியல் குறுக்கீடு இல்லாமல், பாதிக்கப்பட்ட விவசாயிகள் பயன்பெற நடவடிக்கை எடுக்க வேண்டும். குறுவை செய்யாத விவசாயிகளுக்கு அரசு என்ன செய்ய போகிறது என்பதை விளக்க வேண்டும். நீடாமங்கலம் சாத்தப்பன்: புதிய மின் இணைப்புக் கோரி விண்ணப்பித்தவர்களுக்கு மின் இணைப்புக் கொடுக்க வேண்டும். ஆட்சியர் எம். மதிவாணன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

**குமரி மாவட்டத்தில் பரவலாக மழை**

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு பரவலாக மழை பெய்தது. அதிகபட்சமாக முள்ளங்கினாவிளையில் 28 மி.மீ. மழை பதிவானது.

கேரளத்தில் பருவமழை தாமதமாகத் தொடங்கியுள்ளது. தற்போது ஒருசில இடங்களில் மட்டும் மழை பெய்து வருகிறது. இந்நிலையில், கேரளத்தை ஒட்டியுள்ள குமரி மாவட்டத்தில், ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு பல இடங்களில் சாரல் மழை பெய்தது. நாகர்கோவில்,

முள்ளங்கினாவிளை, பாலமோர், மயிலாடி, கன்னியாகுமரி, மார்த்தாண்டம், குலசேகரம் உள்ளிட்ட பகுதிகளில் பரவலாக மழை பெய்தது. திங்கள்கிழமை காலை 8 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக முள்ளங்கினாவிளையில் 28 மி.மீ., நாகர்கோவிலில் 8.8 மி.மீ. மழை பதிவாகி இருந்தது. அணைப் பகுதிகளில் மழை பெய்ததால் பேச்சிப்பாறை, பெருஞ்சாணி, சிற்றாறு அணைகளின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. பேச்சிப்பாறை அணை நீர்மட்டம் திங்கள்கிழமை காலை 8 மணி நிலவரப்படி 40.35 அடியாகவும், பெருஞ்சாணி அணை நீர்மட்டம் 73.25 அடியாகவும், சிற்றாறு-1 அணை நீர்மட்டம் 17.06 அடியாகவும், சிற்றாறு- 2 அணை நீர்மட்டம் 17.16 அடியாகவும், பொய்கை அணை நீர்மட்டம் 9 அடியாகவும், மாம்பழத்துறையாறு அணை நீர்மட்டம் 54.12 அடியாகவும் இருந்தது.

**நெல்லை மாவட்டத்தில் மானியத்துடன் 100 கோழிப் பண்ணைகள்: விண்ணப்பிக்க வேண்டுகோள்**

திருநெல்வேலி மாவட்டத்தில், தமிழக அரசு, தேசிய வங்கி மானியத்துடன் 100 கறிக்கோழிப் பண்ணைகள் அமைக்க அனுமதிக்கப்பட்டுள்ளது; விருப்பமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் மு. கருணாகரன் வெளியிட்ட செய்திக் குறிப்பு: கோழிப் பண்ணைத் தொழிலை ஊக்குவிக்கும் வகையில், கோழிப் பண்ணைத் தொகுப்பு மண்டலம் அமைத்து சிறப்புத் திட்டத்தை செயல்படுத்த தமிழக அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இதன்படி கோழிப் பண்ணைகள் இல்லாத மாவட்டங்களில் அத்தொழிலை ஊக்குவிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

திருநெல்வேலி மாவட்டத்தில் கறிக்கோழிப் பண்ணை அமைக்க விருப்பம் உள்ளவர்களுக்கு, அதற்கான கொட்டகை அமைத்து, உபகரணங்கள் வாங்க ஏற்படும் செலவில் 25 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது.

தேசிய வங்கியின் கோழி துணிகர முதலீட்டு நிதியிலிருந்து 25 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. எஞ்சியுள்ள 50 சதவீத முதலீட்டுத் தொகையை பயனாளிகள் வங்கிக் கடனாக பெற்றுக் கொள்ளலாம்.

ஐந்தாயிரம் கோழிகள் வளர்க்கும் திறன் கொண்டதாக பண்ணை இருக்க வேண்டும். விவசாயிகள், தனிநபர் தொழில் முனைவோர், சுயஉதவிக்குழுவினர் ஆகியோர் இதன் மூலம் பயன்பெறலாம்.

நிகழ் நிதியாண்டில் (2015-16) இம்மாவட்டத்தில் 100 பண்ணைகள் அமைக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. பயனாளிகள் மானியம் பெறுவதற்கான விண்ணப்பத்தை கோட்ட அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளலாம். ஆட்சியரால் அங்கீகரிக்கப்பட்ட கோழிப் பண்ணை ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட கால்நடை மருந்தக உதவி மருத்துவர்கள் பரிந்துரை பெற்று, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தை கோட்ட அலுவலகங்களில் சமர்ப்பிக்க வேண்டும்.

கோழிப் பண்ணை அமைக்க விருப்பம் உள்ளோர், கால்நடை பராமரிப்புத் துறையில் திருநெல்வேலி உதவி இயக்குநர் அலுவலகத்தை 0462 2321454, அம்பாசமுத்திரம் உதவி இயக்குநர் அலுவலகத்தை 04634 260070, தென்காசி உதவி இயக்குநர் அலுவலகத்தை 04633 227744 ஆகிய தொலைபேசி எண்களில் தொடர்பு கொண்டு இம்மாதம் 30 ஆம் தேதிக்குள் விண்ணப்பங்களைப் பெற்று விண்ணப்பிக்க வேண்டும். கோட்ட உதவி இயக்குநர் அலுவலகத்தில் இருந்தும் விண்ணப்பம் பெற்று சமர்ப்பிக்கலாம் என்றார் அவர்.

**கோழிப் பண்ணை அமைக்க ரூ.5.37 லட்சம் மானியம்**

விழுப்புரம் மாவட்டத்தில் 5 ஆயிரம் அலகு கொண்ட 100 கறிக்கோழிப் பண்ணைகளை அமைக்க, தமிழக முதலமைச்சர் ரூ.2.69 கோடி மானியத்

தொகை ஒதுக்கி உத்தரவு பிறப்பித்துள்ளார். இத்திட்டத்தில் ஒரு பயனாளிக்கு ரூ.5லட்சத்து 37 ஆயிரம் மானியமாக கிடைக்கும்.

இது குறித்து மாவட்ட ஆட்சியர் வா.சம்பத் வெளியிட்ட செய்திக்குறிப்பு: தமிழகத்தில் கறிக்கோழிப் பண்ணைகள் அமைக்க ஏற்ற மாவட்டங்களை ஆய்வு செய்து அதில் அரியலூர், விழுப்புரம், கடலூர், பெரம்பலூர், திருநெல்வேலி, விருதுநகர், சிவகங்கை ஆகிய மாவட்டங்களில் கோழிப்பண்ணைகள் அமைக்க ஏற்ற மாவட்டங்களாகத் தேர்வு செய்து 2012 மற்றும் 2013ஆம் ஆண்டில் இருந்து இத் திட்டம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. நடைபெறும் 2015-16ஆம் ஆண்டிலும் மேற்கண்ட 8 மாவட்டங்களில் இத் திட்டம் செயல்படுத்த ரூ.25 கோடி நிதி ஒதுக்கீடு செய்து அரசு ஆணை வழங்கியுள்ளது.

இத் திட்டத்தின் மூலம் 5 ஆயிரம் அலகுகள் கொண்ட கோழிப்பண்ணைகள் அமைக்க தமிழக அரசின் 25 சதவீதம் மானியமாக ஒரு பயனாளிக்கு ரூ.2 லட்சத்துக்கு 68 ஆயிரத்து 750 ரூபாயும், மத்திய அரசின் கோழி வளர்ப்புக்கான முதலீட்டு நிதியில் இருந்து 25 சதவீதம் மானியமாக ரூ.2 லட்சத்துக்கு 68 ஆயிரத்து 750-ம் சேர்த்து ரூ.5 லட்சத்து 37 ஆயிரத்து 500 மானியமாக வழங்கப்படும்.

தமிழக அரசின் மானியத் தொகை, பயனாளிகள் 75 சதவீதம் கொட்டகைப் பணிகள் முடிக்கப்பட்டவுடன் கடன் கணக்கில் வரவு வைக்கப்படுவதோடு, மத்திய அரசின் நபார்டு மானியத் தொகை 3 ஆண்டுகள் கழித்து தவணைத் தொகையைத் தொடர்ந்து தவறாமல் கடன் தொகை முழுவதும் கட்டி முடிக்கப்பட்டவுடன் வரவு வைக்கப்படும்.

இந்தக் கறிக்கோழிப் பண்ணைகள் கோழிப்பண்ணை ஒருங்கிணைப்பாளர்கள் மூலம் கோழிக் குஞ்சுகள், தீவனம், மருந்துகள் ஆகியவை விநியோகிக்கும்படி மேற்பார்வையாளர்கள் மூலமாகத் தொடர்ந்து பார்வையிடப்பட்டு வளர்க்கப்பட்ட கோழிகளுக்குரிய வளர்ப்புத் தொகை பயனாளிகள் கடன் பெற்ற வங்கிகளுக்கு

அனுப்பப்பட்டு தவணைத் தொகை போக மீதம் பயனாளிகளுக்கு வழங்கப்படும்.

இத் திட்டத்தின் கீழ் பயன்பெற விரும்புபவர்கள் விழுப்புரம் மாவட்ட விவசாய பெருங்குடி மக்கள் தங்கள் கிராமத்துக்கு அருகிலுள்ள கால்நடை மருந்தக, கால்நடை உதவி மருத்துவரை அணுகி உரிய விண்ணப்பத்தைப் பெற்று, விண்ணப்பத்துடன் புகைப்படம், இடத்தின் நகல், அடங்கல் நகல், வங்கி மேலாளர் மற்றும் கோழிப்பண்ணை ஒருங்கிணைப்பாளர்கள் ஒப்புதல் கடிதம், குடும்ப அட்டை நகல் போன்றவற்றை இணைத்து ஜூன் 30ஆம் தேதிக்குள் ஒப்படைக்க வேண்டும். பெறப்படும் விண்ணப்பங்கள் வங்கி மேலாளர்கள் மூலம் தேர்வு செய்யப்பட்டு கோழிப்பண்ணைகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துள்ளார்.

**விவசாயிகள்-வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் கூட்டம்**

குறிஞ்சிப்பாடி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் விவசாயிகள்-வியாபாரிகளுக்கு இடையே நிலவும் கருத்து வேறுபாடுகளை நீக்க ஒருங்கிணைப்புக் கூட்டம் நடைபெற்றது.

ஒழுங்குமுறை விற்பனைக் கூட வளாகத்தில் அண்மையில் நடைபெற்ற இக்கூட்டத்துக்கு விவசாய சங்கச் செயலர் குமரகுரு தலைமை வகித்தார். மணிலா வியாபாரிகள் சங்கத் தலைவர் சிராஜூதீன், பொருளர் காசிலிங்கம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். உழவர் மன்றத் தலைவர் ராமலிங்கம், ஜெயபால் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில், ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் மூலம் வழங்கப்படும் திட்டங்கள் குறித்து விவசாயிகளுக்கு தகவல் தெரிவிப்பது, விற்பனைக்கூட வளாகத்தில் பாதுகாக்கப்பட்ட குடிநீர், ஓய்வுஅறை உள்ளிட்ட அடிப்படை வசதிகள் செய்து கொடுப்பது, அறுவடை காலங்களில் விளைபொருள்களை சிறுவிவசாயிகள் விற்பனை செய்த பின்னரே பெருவிவசாயிகள் விற்பனை செய்ய வேண்டும், ஏல நேரத்தை

மாற்றி அமைத்தல், விலை ஒப்புமை தகவல் உள்ளிட்ட பிரச்னைகள் குறித்து விவாதிக்கப்பட்டது.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**முருங்கை அமோகம்: விவசாயிகளுக்கு நிரந்தர வருமான வாய்ப்பு**

தோட்டக்கலைத் துறை ஆலோசனையால், மாநிலம் முழுவதும் முருங்கை சாகுபடி அதிகரித்துள்ளதால், விவசாயிகளுக்கு நிரந்தர வருமான வாய்ப்பு உருவாகி உள்ளது. மரம் மற்றும் செடிவகை பயிரான முருங்கையில் இரும்புச் சத்து அதிகம். முருங்கை, அனைத்து வகை மண்ணிலும் வளரக்கூடியது. பாசன வசதி, குறைந்த வெப்பம் அதிகமுள்ள வறண்ட பகுதிகளிலும், மணல் தன்மை கொண்ட நிலங்களிலும் முருங்கை வளரும். தோட்டக்கலை பயிரான முருங்கை பயிரிடுவதன் மூலம், விவசாயிகளுக்கு ஆண்டு முழுவதும் நிரந்த வருமானம் கிடைக்கும்.

ஆனால், காய்கறிகளை பயிரிடுவதை போல, பல மாவட்டங்களை சேர்ந்த விவசாயிகள், முருங்கையை அதிகளவில் பயிரிடுவதில்லை. இதை தவிர்த்து, முருங்கை பயிர் சாகுபடியை ஊக்குவிக்கும் நடவடிக்கை, தோட்டக்கலைத் துறை மூலம் மேற்கொள்ளப்பட்டது; இதற்கு, கைமேல் பலன் கிடைத்துள்ளது. மாநிலம் முழுவதும் முன், 50 ஆயிரம் ஏக்கர் வரை இருந்த முருங்கை சாகுபடி, ஒரு லட்சம் ஏக்கருக்கு மேல் அதிகரித்து உள்ளது. இதன்மூலம், விவசாயிகளுக்கு நிரந்தர வருமானம் கிடைக்கும் வாய்ப்பு உருவாகி உள்ளது. இருமடங்கு உற்பத்தி, மும்மடங்கு லாபம் : தோட்டக்கலைத் துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது:தோட்டக்கலைத்

துறை, இருமடங்கு உற்பத்தி, மும்மடங்கு லாபம் என்ற குறிக்கோளுடன் இயங்கி வருகிறது. இதற்காக, விவசாயிகளுக்கு சாகுபடி உத்திகள் குறித்த, பல ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன. ஒரே காய்கறியை சாகுபடி செய்தால், அவற்றின் உற்பத்தி அதிகரிக்கும் போது, விவசாயிகள் நஷ்டம் அடையும் சூழல் ஏற்படும். அதனால், நான்கு வகை காய்கறிகள், முருங்கை பயிரிட வேண்டும் என, விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. அதை ஏற்று, முருங்கை சாகுபடியை விவசாயிகள் அதிகரித்து உள்ளனர். இதன்மூலம், ஆண்டு முழுவதும் அவர்களுக்கு நிரந்தர வருமானம் கிடைக்கும்.இவ்வாறு, அவர் கூறினார்.

## மேட்டூர் அணை நீர்மட்டம்26 நாளில் 7 அடி உயர்வு

மேட்டூர்:தமிழக எல்லையில், காவிரி நீர்ப்பிடிப்பு பகுதியில் தீவிரம் அடைந்த கோடை மழையால், மேட்டூர் அணை நீர்மட்டம், கடந்த, 26 நாட்களில், 7 அடி உயர்ந்துள்ளது. காவிரி நீர்ப்பிடிப்பு பகுதியில் நீடித்த வறட்சியால், நீர்வரத்து சரிந்து, கடந்த மே 13ம் தேதி, மேட்டூர் அணை நீர்மட்டம், 67.070 அடியாகவும், நீர் இருப்பு, 30.255 டி.எம்.சி.,யாகவும் குறைந்தது.

இந்நிலையில், தமிழக எல்லையில், காவிரி நீர்ப்பிடிப்பு பகுதியில் அவ்வப்போது கோடைமழை தீவிரம் அடைந்ததால், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்தது.மேட்டூர் அணை நீர்மட்டம், 74 அடியாகவும், நீர் இருப்பு, 36.5 டி.எம்.சி.,யாகவும் அதிகரித்தது. அணைக்கு, வினாடிக்கு, 5,981 கன அடி நீர் வந்து கொண்டிருந்தது. வினாடிக்கு, 2,000 கன அடி நீர் வெளியேற்றப்பட்டது. கடந்த 26 நாட்களில், மேட்டூர் அணை நீர்மட்டம், 7 அடியும், நீர் இருப்பு, 6.5 டி.எம்.சி.,யும் அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## நூடுல்ஸ் தயாரிப்பு நிறுவனங்கள் மீது நடவடிக்கை பாய்ந்தது : பரிசோதிக்க மாநிலங்களுக்கு மத்திய அரசு உத்தரவு

புதுடில்லி : 'நெஸ்லே' உட்பட, ஏழு பிரபல நிறுவனங்களின் நூடுல்ஸ் மற்றும் உணவுப் பொருட்களின் தரத்தை ஆய்வு செய்து அறிக்கை அளிக்கும்படி, அனைத்து மாநில அரசுகளுக்கும், தேசிய உணவுப்பாதுகாப்பு மற்றும் தர ஆணையம் உத்தரவிட்டுள்ளது. 'நெஸ்லே' நிறுவனம் தயாரிக்கும், 'மேகி' நூடுல்சில் அனுமதிக்கப்பட்ட அளவை விட அதிகமாக, ரசாயன உப்பு மற்றும் காரீயம் கலப்பு இருப்பதாக தர பரிசோதனையில் தெரியவந்தது.

### சிக்கல்:

இதையடுத்து, மேகி நூடுல்ஸ் மட்டுமல்லாமல், அந்த நிறுவனத்தின் ஒன்பது வகையான உணவுப் பொருட்களை விற்பனை செய்ய, தேசிய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர ஆணையம் தடை விதித்துள்ளது. கடைகளில் இருப்பு உள்ள மேகி நூடுல்ஸ் பாக்கெட்டுகளை திரும்பப் பெறும்படியும் அந்த நிறுவனத்துக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதையடுத்து, மற்ற நிறுவனங்கள் தயாரிக்கும் நூடுல்ஸ் மற்றும் உணவுப் பொருட்களின் விற்பனைக்கும் சிக்கல் வந்துஉள்ளது.



[redacted]

**இதுகுறித்து, உணவுப் பாதுகாப்பு மற்றும் தர ஆணைய தலைவர் மாலிக் கூறியுள்ளதாவது:**

மேகி நூடுல்சில் ரசாயன கலப்பு அதிகம் இருப்பது தெரியவந்ததால், அதன் விற்பனைக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து, மற்ற நிறுவனங்கள் தயாரிக்கும் உணவுப் பொருட்களையும் ஆய்வு செய்யும்படி புகார்கள் வந்தன. இதையடுத்து, ருசி இன்டர்நேஷனல், சி.ஜி., புட்ஸ் இந்தியா, ஜி.எஸ்.கே., கன்ஸ்யூமர் ஹெல்த்கேர், ஐ.டி.சி., லிட்., ஏ.ஏ.நியூட்ரிஷியன், இந்தோ நிஷான் புட்ஸ் ஆகிய நிறுவனங்கள் தயாரிக்கும் உணவுப் பொருட்களையும் ஆய்வு செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டு உள்ளது. 'நெஸ்லே இந்தியா' நிறுவனம் தயாரிக்கும் உணவுப் பொருட்களையும் ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும். அனைத்து மாநில அரசுகளும், யூனியன் பிரதேசங்களும், இந்த நிறுவனங்கள் தயாரிக்கும் குறிப்பிட்ட உணவுப் பொருட்களின் மாதிரிகளை தர ஆய்வுக்கு உட்படுத்தி, அதுகுறித்த விரிவான அறிக்கையை, வரும், 19ம் தேதிக்குள் தெரிவிக்க வேண்டும். இந்த தர பரிசோதனையை அதிகாரபூர்வ ஆய்வகத்தில் மேற்கொள்ள வேண்டும். இந்த நிறுவனங்கள் விதிமுறைகளை மீறி செயல்படுவது தெரிய வந்தாலும், அதுகுறித்து உடனடியாக தகவல் தெரிவிக்க வேண்டும்.

### அதிரடி :

இந்த உணவுப் பொருட்கள் தயாரிப்பில் உரிய பாதுகாப்பு நடைமுறைகள் பின்பற்றப்படுகிறதா என்பதையும் ஆய்வு அறிக்கையில் தெரிவிக்க வேண்டும்.

ரசாயனம் அதிகம் கலந்துள்ளதாக ஏற்கனவே நிரூபிக்கப்பட்டுள்ள உணவுப் பொருட்களை, கடைகளில் இருந்து உடனடியாக திரும்பப் பெற வேண்டும் அல்லது அழிக்க வேண்டும். கேக், மசாலா, டேஸ்ட் மேக்கர் போன்ற உணவுப் பொருட்களை தனியாக ஆய்வுக்கு உட்படுத்த

வேண்டும். இவ்வாறு, அவர் கூறியுள்ளார். உணவு பாதுகாப்பு மற்றும் தர ஆணையத்தின் இந்த அதிரடி நடவடிக்கையை அடுத்து, இந்த ஏழு நிறுவனங்களின் உணவுப் பொருட்களுக்கும் சிக்கல் ஏற்பட்டு உள்ளது.

## எவை எவை?

தர பரிசோதனைக்கு உத்தரவிடப்பட்டுள்ள உணவுப் பொருட்களும், அவற்றை தயாரிக்கும் நிறுவனங்களும்:

1. சி.சி., புட்ஸ்வய் வய் நூடுல்ஸ், புஜியா சிக்கன்2. ருசி இன்டர்நேஷனல்
கோகா உடனடி நூடுல்ஸ்
3. ஜி.எஸ்.கே., கன்ஸ்யூமர் ஹெல்த் பூடுல்ஸ்
4. நெஸ்லேமேகி உடனடி நூடுல்ஸ் மற்றும் ஒன்பது வகையான உணவுப் பொருட்கள்
5. இந்தோ நிஷான்டாப் ராமென் ஆட்டா மசாலா
6.ஐ.டி.சி., மூன்று வகையான உடனடி நூடுல்ஸ்
7. ஏ.ஏ., நியூட்ரிஷியன் யம்மி சிக்கன் மற்றும் வெஜ் நூடுல்ஸ்

## மிசோரம் பிடிவாதம்:

வட கிழக்கு மாநிலமான மிசோரமில், முதல்வர் லால் தங்க்வாலா தலைமையிலான காங்கிரஸ் ஆட்சி நடக்கிறது. பெரும்பாலான மாநிலங்களில், 'மேகி' நூடுல்சுக்கு தடை விதிக்கப்பட்ட நிலையில், இங்கு, 'மேகி' நூடுல்சுக்கு தடை விதிப்பது குறித்த முடிவு தள்ளிவைக்கப்பட்டுள்ளது. **மீள்வது கடினம்:**

*'மேகி நூடுல்சுக்கு விதிக்கப்பட்ட தடையிலிருந்து மீண்டு வருவது, 'நெஸ்லே' நிறுவனத்துக்கு கடினமான விஷயமாகவே இருக்கும்' என,

சந்தை ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். *மேகி நூடுல்ஸ் மட்டுமல்லாமல், அந்த நிறுவனத்தின் அனைத்து தயாரிப்புகளும் விற்பனையில் தேக்கநிலையை சந்தித்துள்ளன. *'நெஸ்லே' நிறுவனத்தின் மொத்த விற்பனையில், மேகி நூடுல்சின் பங்கு மட்டும், 25 சதவீதம். *இதன் மூலம், அந்த நிறுவனத்துக்கு, மாதத்துக்கு, 200 கோடி ரூபாய் வருவாய் கிடைத்து வந்தது. *தர பரிசோதனைக்கான செலவை விட, விளம்பரத்துக்காக, 'நெஸ்லே' நிறுவனம் அதிகம் செலவழிக்கிறது. *பங்குச் சந்தையிலும், 'நெஸ்லே' நிறுவனத்தின் பங்குகள் கடும் வீழ்ச்சியை சந்தித்துள்ளது. கடுமையான தர பரிசோதனைகளுக்கு பின் தான், எங்கள் நிறுவனத்தின் உணவுப் பொருட்கள் விற்பனைக்கு வருகின்றன. எங்களின் தயாரிப்புகள், உடல் நலத்துக்கு எந்த தீங்கும் ஏற்படுத்தாதவை.

**செய்தி தொடர்பாளர், ஐ.டி.சி., லிமிடெட்**

**நீள்கிறது உணவு பாதுகாப்பு பரிசோதனை பட்டியல்: மசாலா பொடி, பஞ்சாமிர்தமும் கூட தப்பவில்லை**



தமிழகத்தில், 'மேகி' உள்ளிட்ட, நான்கு விதமான, நூடுல்ஸ் விற்பனைக்கு தடை

விதிக்கப்பட்டுள்ள நிலையில், அடுத்தகட்டமாக, உப்பு, எண்ணெய், மசாலா பொடி, பஞ்சாமிர்தம் என, உணவு பாதுகாப்புத் துறையின் ஆய்வுப் பட்டியல் நீள்கிறது. 20க்கும் மேலான உணவுப் பொருட்கள், மாதிரி எடுக்கப்பட்டு வருவதால், தனியார் நிறுவனங்கள் கலக்கம் அடைந்துள்ளன.

'நெஸ்லே' நிறுவன தயாரிப்பான, 'மேகி நூடுல்ஸ்'சில், உடலுக்கு தீங்கு விளைவிக்கும், காரீயத்தின் அளவு அதிகம் உள்ளதாகவும், அவை சாப்பிட லாயக்கற்றது எனவும், உணவு பாதுகாப்புத் துறையினர் ஆய்வு முடிவுகளில் தெளிவானது. இதனால், நாடு முழுவதும், இந்த நூடுல்ஸ் விற்பனைக்கு, மத்திய அரசு தடை விதித்துள்ளது.

### பரிசோதனைக்கு அரசு உத்தரவு:

இந்நிலையில், சந்தையில் விற்பனையில் உள்ள, மேலும், 23 வகையான, 'நூடுல்ஸ்'களின் மாதிரி எடுக்கப்பட்டு, பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டு உள்ளன. இது போன்று, மற்ற பாக்கெட் உணவுப் பொருட்களிலும், வேதிப்பொருட்களின் அளவும் பரிசோதிக்க, அரசு உத்தரவிட்டது.இதன்படி, மாவட்டந்தோறும், உணவு பாதுகாப்பு அதிகாரிகள், தங்கள் மாவட்ட சந்தையில் விற்பனையில் உள்ள, முக்கிய பாக்கெட் உணவு மாதிரிகளை எடுத்து வருகின்றனர்.சிப்ஸ் வகைகள், மசாலா பவுடர், பால் பவுடர், சமையல் எண்ணெய், நெய், ரெடிமேட் சப்பாத்தி - புரோட்டா, பழங்கள், பதப்படுத்திய காய்கறிகள், உப்பு, குளிர் பானங்கள், பாட்டில் - கேன் குடிநீர், ஊறுகாய், பஞ்சாமிர்தம், வத்தல் குழம்பு, கறிவேப்பிலை பொடி பேஸ்ட், சில்லி - சாஸ் வகைகள் உட்பட, உணவு பாதுகாப்புத் துறையினரால், 20க்கும் மேற்பட்ட மாதிரிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

## விரைவில் அடுத்தகட்ட நடவடிக்கை:

இதன் மாதிரிகள் அனைத்தும், ஆறு இடங்களில் உள்ள, உணவு பாதுகாப்பு பரிசோதனைக் கூடங்களுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன. **இதுகுறித்து, உணவு பாதுகாப்புத் துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது:**உணவு பாதுகாப்புத் துறை தானாகவும், புகாரின்படியும், மாநிலம் முழுவதும், 20க்கும் மேற்பட்ட உணவுப் பொருட்களின் மாதிரிகள் எடுக்கப்பட்டு வருகின்றன; அந்த மாதிரிகள், பரிசோதனைக் கூடங்களுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன. மாதிரிகள் அதிகம் எடுக்கப்பட்டு உள்ளதால், முடிவுகள் கிடைக்க, சற்று தாமதம் ஆகலாம். முடிவுகள் அடிப்படையில், அடுத்தகட்ட நடவடிக்கைகள் இருக்கும். உணவுப் பொருட்களின் மாதிரி ஆய்வுகள் தொடரும்.இவ்வாறு அவர் கூறினார்.

இவற்றில் பெரும்பாலும், பன்னாட்டு நிறுவனங்களின் தயாரிப்புகளே அதிகம் உள்ளன. மாதிரிகள் முடிவில், அடுத்தகட்ட நடவடிக்கைகள் இருக்கும்.

## பள்ளி விடுதிகள், 'கேன்டீன்'களில் தடை:

தனியார் பள்ளிகளின் கேன்டீன்கள் மற்றும் மாணவ, மாணவியர் விடுதிகள், பிற்படுத்தப்பட்டோர், பட்டியலினத்தவர்களுக்கான மாணவர், மாணவியர் விடுதிகளில், தடை செய்யப்பட்ட உணவுப் பொருட்களை பயன்படுத்தக் கூடாது என்று, மாவட்ட வாரியாக உத்தரவிடப்பட்டுள்ளது.இதற்கான அதிகாரபூர்வ அறிக்கை விரைவில் வெளியிடப்படும் என்று, கல்வித் துறை அதிகாரிகள் தெரிவித்தனர். அவர்கள் கூறுகையில், 'அரசு விடுதிகளில், அரசின், 'மெனு' உணவுப் பட்டியலில் நூடுல்ஸ் கிடையாது. ஆனாலும், பல மாணவ, மாணவியர் தாமாக விரும்பி நூடுல்ஸ் வாங்கி, சமையல் ஊழியர்களிடம் செய்து

கேட்பது வழக்கம். 'இனி இந்த விடுதிகளில் தானாக விரும்பியும் நூடுல்ஸ் சாப்பிட அனுமதியில்லை. இதேபோல், பல உண்டு உறைவிட பள்ளிகளுக்கு, சி.பி.எஸ்.இ., சார்பில் எச்சரிக்கை விடப்பட்டுள்ளது' என்றனர்.

**குறுவை சாகுபடிக்கு உரத்தட்டுப்பாடு வராது! வேளாண் துறை அதிகாரிகள் தகவல்**



திருப்பூர் : குறுவை சாகுபடிக்கு தேவையான உரங்கள், திருப்பூர் மாவட்டத்தில் போதிய அளவு இருப்பு உள்ளதாக, வேளாண் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

திருப்பூர் மாவட்டத்தில், 1.90 லட்சம் எக்டேர் பரப்பளவில் விவசாய பயிர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. நெல், மக்காச்சோளம், சின்ன வெங்காயம், மஞ்சள், சோளம் மற்றும் காய்கறி பயிர்களும்; தென்னை சாகுபடியும் அதிகளவு உள்ளது. விதைப்பு முதல் அறுவடை வரை, பல்வேறு நிலைகளில், பயிர்களுக்கு உரம் தேவைப்படுகிறது.கடந்தாண்டு பருவ மழை ஒத்துழைத்த நிலையில், சாகுபடி பரப்பு அதிகரித்தது. ஆனால், யூரியா, பொட்டாஷ் உள்ளிட்ட உரங்கள் பற்றாக்குறை ஏற்பட்டன; போதிய அளவு உரம் கிடைக்காமல், பயிர்கள் பாதிப்புக்கு உள்ளாகின. பல மடங்கு கூடுதல் விலைக்கு, முறைகேடாக அவை

விற்கப்பட்டன.

இந்தாண்டு, சராசரியை விட கூடுதலாக, கோடை மழை பெய்துள்ளது; தென்மேற்கு பருவ மழையும் துவங்கியுள்ளதால், குறுவை சாகுபடிக்கு விவசாயிகள் ஆயத்தமாகி வருகின்றனர். கடந்தாண்டு போல் அல்லாமல், இம்முறை உரங்கள் போதிய அளவு இருப்பு வைக்க வேண்டும் என, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். வேளாண் துறை அதிகாரிகள் கூறியதாவது: வேளாண் தரக்கட்டுப்பாட்டு துறை மூலம், உரங்கள் இருப்பு தொடர்ந்து கண்காணிக்கப்படுகிறது. கோவை பிரிவு கட்டுப்பாட்டில் திருப்பூர், அவிநாசி, பல்லடம், உடுமலை, மடத்துக்குளம் பகுதிகள்; ஈரோடு பிரிவு கட்டுப்பாட்டில் தாராபுரம், காங்கயம், வெள்ளக்கோவில் பகுதிகள் உள்ளன. நல்ல மழை, அணைகளில் நீர் திறப்பு போன்றவற்றால், குறுவை சாகுபடி பணியை துவக்க, விவசாயிகள் தயாராக உள்ளனர். அதற்கேற்ப, போதிய அளவு உரங்கள் இருப்பில் உள்ளன. திருப்பூர், பல்லடம், அவிநாசி, உடுமலை பகுதி கடைகளில் யூரியா, இரண்டாயிரம் டன் இருப்பு உள்ளது; வரும், 15ல், நான்காயிரம் டன்னாக அதிகரிக்கும். பொட்டாஷ் உரம், 500 டன் தேவை உள்ளது; தற்போது, 2,300 டன் வரை இருப்புள்ளது. டி.ஏ.பி., உரம், 2,500 டன்னும், காம்ப்ளக்ஸ் உரம், 1,500 டன்னும் இருப்பில் உள்ளன. தேவையான அனைத்து உரங்களும், போதிய அளவு உள்ளன.தாராபுரம், மூலனூர், காங்கயம், வெள்ளக்கோவில் பகுதிகளில் யூரியா, 1,110 டன்; பொட்டாஷ், 785 டன்; டி.ஏ.பி., 860 டன்; காம்ப்ளக்ஸ், 1,240 டன் உள்ளிட்ட அனைத்து உரங்களும் இருப்பு உள்ளன. யூரியா பற்றாக்குறையை சமாளிக்க, இறக்குமதி செய்யப்படும். இந்தாண்டு, உரங்கள் பற்றாக்குறை ஏற்பட வாய்ப்பு இல்லை.இவ்வாறு, அவர்கள் கூறினர்.

## அதிகரிக்கும் மாடு விற்பனை; களை கட்டும் திருப்பூர் சந்தை

திருப்பூர் : மழை பெய்து, பசுந்தீவனம் அதிகளவில் கிடைப்பதால், திருப்பூரில் மாடு விற்பனை அதிகரித்துள்ளது.

திருப்பூர், தென்னம்பாளையம் கரைத்தோட்டத்தில் மாட்டு சந்தை உள்ளது. வாரந்தோறும் திங்கள்கிழமை கூடும் இச்சந்தைக்கு, மாவட்டத்தின் பல பகுதிகளில் இருந்தும், ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாடுகள், விற்பனைக்கு வருகின்றன.மாவட்டத்தில் பரவலாக மழை பெய்து, பசுந்தீவனம் அதிகளவில் கிடைக்கிறது. இதனால், கால்நடை வளர்ப்போர் மற்றும் பால் உற்பத்தி யாளர்கள், மகிழ்ச்சி அடைந்துள்ளனர். பால் உற்பத்தி அதிகரித்துள்ளநிலையில், மேலும் கால்நடைகள் வாங்குகின்றனர்.அவ்வகையில், சந்தைகளில் மாடு விற்பனை, தற்போது அதிகரித்துள்ளது. திருப்பூர் மாட்டுச்சந்தை, திங்கள்தோறும் பகல், 2:00 மணிக்கு துவங்குகிறது. பல பகுதிகளில் இருந்து மாடுகள், கன்றுக்குட்டி, எருமை ஆகியன, சரக்கு வேன் மற்றும் ஆட்டோக்களில்கொண்டு வரப்படுகின்றன. ஒவ்வொரு மாட்டுக்கும், சுங்கமாக, 30 ரூபாய் வசூலிக்கின்றனர். சில மாதங்களுக்கு முன் வரை, இச்சந்தை, இரவு, 8:00 மணிக்கு துவங்கி, அதிகாலை வரை நடந்தது. இருளில் மாடுகளின் தரம் அறிவது, கள்ளநோட்டு கலந்து விடுவது, வியாபாரிகளிடம் நடக்கும் வழிப்பறி என, பல பிரச்னைகள் ஏற்பட்டதால், பகல் நேரத்துக்கு மாற்றப்பட்டுள்ளது.தவிர, ஒட்டன்சத்திரம் சந்தை திங்கள் அதிகாலை நிறைவடைவதால், அங்கு வியாபாரத்துக்கு சென்று வருவோருக்கும், நேர மாற்றம் ஏதுவாக உள்ளது. பால் உற்பத்தி தவிர, இறைச்சிக்காக வாங்கப்படும் மாடுகளும் விற்கப்படுகின்றன. இதனால், கோவை மற்றும் கேரளாவில் இருந்தும் வியாபாரிகள் வருகின்றனர். போக்குவரத்து அவதி : சந்தைக்கு மாடு ஏற்றி வரும் வாகனங்கள், கரைத்தோட்டம், சூர்யா நகர் பகுதியில் நீண்ட

நேரம் நிறுத்தப்படுகிறன்றன. கடும் வெயிலால் கால்நடைகள் சோர்ந்து விடுகிறன்றன. குறுகிய பாதையில் நீண்ட வரிசையில் மணிக்கணக்கில் நிற்பதால், போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுகிறது. போக்குவரத்து போலீசார் கண்காணித்து, நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## பூக்கள் வாடும் வரை பொதுமக்கள் பார்வைக்கு; ஏற்காடு மலர் கண்காட்சி குழப்பத்துக்கு தீர்வு

சேலம் : "ஏற்காடு மலர் கண்காட்சி, இரு நாள் மட்டுமே நடக்கும்' என, மாவட்ட நிர்வாகம் அறிவித்த நிலையில், மேலும், ஒரு வாரத்துக்கு நீட்டிப்பு செய்யப்படும் என்ற தகவலால், சுற்றுலா பயணிகளிடையே குழப்பம் ஏற்பட்டுள்ளது. "கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ள பூக்கள் வாடும் வரை, பொதுமக்கள் அவற்றை பார்வையிடலாம்' என, கலெக்டர் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு ஆண்டும், மே மாத இறுதியில், ஏற்காட்டில், கோடைவிழா நடத்தப்படுவது வழக்கம். ஆட்டம், பாட்டம், கலைநிகழ்ச்சி, விளையாட்டுப் போட்டி, என கோடை விழா களைகட்டும். இந்த ஆண்டுக்கான விழா, பல்வேறு காரணங்களால் ரத்து செய்யப்பட்டது.மலர் கண்காட்சிக்கு, பூக்கள் தயார் செய்திருந்த நிலையில், அவற்றை வீணாக்க வேண்டாம் என்ற நோக்கில், கடந்த, 6, 7ம் தேதிகளில், மலர் கண்காட்சி மட்டும் நடத்தப்பட்டது. இந்த கண்காட்சியில், ஒரு லட்சத்துக்கும் மேலான பூக்களைக் கொண்டு, இந்தியா கேட், காண்டாமிருகம், கொண்டை கொக்கு, புற்களால் வடிவமைக்கப்பட்ட யானை உருவம் மற்றும் காய்கறிகளைக் கொண்டு டிராகன், முதலை, இளவரசர் உருவம் ஆகியவை தயார்

செய்யப்பட்டிருந்தது.கடந்த, இரண்டு நாட்களாக, சுற்றுலா பயணிகளும், பொதுமக்களும் ஆர்வமுடன் வந்து பார்த்து ரசித்தனர்.

இந்நிலையில், மலர் கண்காட்சி, மேலும் ஒரு வாரத்துக்கு நீட்டிப்பு செய்யப்படுவதாகவும், கலெக்டர் அறிவிப்பு வெளியிட்டுள்ளதாகவும், சில பத்திரிகைகளில் செய்தி வெளியானது.அது தொடர்பாக, எவ்வித அறிவிப்பும், கலெக்டர் சார்பில் வெளியிடப்படவில்லை. கண்காட்சிக்கு பயன்படுத்திய பூக்கள் வாடும் வரை, எப்போதும் போல் பூங்காவிலேயே இருக்கும், இரண்டு நாள் மட்டுமே கண்காட்சி நடந்தது என, செய்தி மக்கள் தொடர்புத்துறை சார்பில் மறுப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.மலர் கண்காட்சி நீட்டிப்பு தொடர்பாக, தோட்டக்கலைத்துறையினருக்கு எந்த தகவலும் அளிக்கப்படவில்லை.சேலத்தைச் சேர்ந்த, பொதுமக்களும், நேற்று, ஏற்காடுக்கு செல்வதா, வேண்டாமா என்ற குழப்பத்தில் இருந்தனர்.

தோட்டக்கலை உதவி அலுவலரும், ஏற்காடு அண்ணாபூங்கா மேற்பார்வையாளருமான பாஸ்கர் கூறியதாவது:மலர் கண்காட்சி நீட்டிப்பு செய்துள்ளதாக பத்திரிகைகளில் தான் பார்த்தேன். எங்களுக்கு தகவல் எதுவும் வரவில்லை. ஒவ்வொரு கோடை விழாவின் போதும், வடிவமைக்கப்பட்ட உருவங்களில் இருக்கும் பூக்கள் காயும் வரை, வைத்திருப்போம். அது போன்று தான் இந்த முறையும் இருக்க வாய்ப்புள்ளது. எங்களுடைய அதிகாரிக்கு தான் அதைப்பற்றி தெரியும்.இவ்வாறு, அவர் கூறினார்.

கலெக்டர் மகரபூஷணம் கூறியதாவது:மலர் கண்காட்சி தொடர்பாக யாரும் குழப்பமடைய தேவையில்லை. மீடியா நண்பர் ஒருவர் கேட்டபோது, "ஒரு வாரம் வரை, அவை இருக்கும்' என்றேன். அதை நீட்டிப்பு என்று கூற முடியாது. பல்லாயிரம் மலர்களை கொண்டு

வடிவமைக்கப்பட்ட உருவங்களை, பூக்கள் வாடுவதற்குள், பொதுமக்கள் பார்த்து ரசிக்கலாம்.இவ்வாறு, அவர் கூறினார்.

**'மணம்' வீசாத மலர் சாகுபடி புனரமைப்புக்கு கோரிக்கை**

ஊட்டி : நீலகிரியில், மலர் சாகுபடி தொழிலை மேம்படுத்த, அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கை வலுத்துள்ளது.

நீலகிரியில், தேயிலை தொழிலில் ஏற்பட்ட வீழ்ச்சியை தொடர்ந்து, 2005ல், கொய்மலர் சாகுபடியை அரசு ஊக்குவித்தது; மிக எளிதாக கிடைத்த வங்கிக் கடன்களால், தேயிலை விவசாயத்தில் ஈடுபட்டு வந்த, பல விவசாயிகள், தங்கள் தோட்டத்தின் ஒரு பகுதியில், பசுமைக் குடில் அமைத்து, கொய்மலர் சாகுபடியில் ஈடுபட்டனர். தற்போது நலிவடைந்துள்ள இத்தொழிலை, மேம்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை வலுத்துள்ளது.

இதுகுறித்து, நீலகிரி கொய்மலர் சாகுபடி சிறு விவசாயிகள் சங்கத்தினர் மாநில முதல்வர், மாவட்ட கலெக்டருக்கு அனுப்பியுள்ள மனு:தரமற்ற நாற்று மற்றும் விதைகள் வினியோகம் செய்தது; மலர்களை சந்தைப்படுத்த முடியாத நிலை; இயற்கை சீற்றத்தால் பசுமை குடில்களுக்கு ஏற்பட்ட பாதிப்பு; தரமற்ற விதைகளை இடைத்தரகர்கள் வழங்கியது; இடுபொருட்களின் விலையேற்றம் போன்ற காரணங்களால் கொய்மலர் சாகுபடி நலிவடைந்தது. இப்பிரச்னைகளுக்கு தீர்வு காண வேண்டும் என்ற தொடர் கோரிக்கையின் விளைவாக, அரசு தோட்டக்கலைத்துறை வாயிலாக தரமான நாற்றுகளை உற்பத்தி செய்து, விவசாயிகளுக்கு வழங்க, 1.40 கோடி ரூபாய் செலவில், தும்மனட்டியில் கார்னேஷன் நாற்று உற்பத்தி மையம் நிறுவப்பட்டது.

இம்மையத்தில் விரைவில் நாற்று உற்பத்தியை துவக்கி, விவசாயிகளுக்கு வழங்க வேண்டும். வங்கிக் கடன் தவணையை திரும்ப செலுத்த

முடியாததால், வங்கிகள் ஜப்தி நடவடிக்கையில் இறங்கியுள்ளன; எனவே, வங்கிக் கடன்களை ரத்து செய்ய வேண்டும். தொழிலை மேம்படுத்த ஆக்கப்பூர்வ நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு, மனுவில் கூறப்பட்டுள்ளது.

## அய்யலூரில் தயாராகும் 1.30 லட்சம் மரக்கன்றுகள்

வடமதுரை: வேடசந்தூர் தாலுகா விவசாயிகளுக்கு இலவசமாக வழங்க, வனத்துறை சார்பில் 1.30 லட்சம் மரக்கன்றுகள் தயாராகி வருகிறது. தமிழ்நாடு பல்லுயிர் பரவல் பாதுகாப்பு மற்றும் பசுமையாக்கும் திட்டத்தின் கீழ், அய்யலூர் வனத்துறை சார்பில் மரக்கன்றுகள் வளர்க்கும் பணி நடந்து வருகிறது. இதற்காக அய்யலூர்-மணியக்காரன்பட்டி ரோட்டில், ஒரு தோட்டத்தை குத்தகைக்கு எடுத்துள்ள வனத்துறையினர், தேக்கு, குமிழ், பூவரசு, பீநாரி, வேம்பு, புளி வகை மரக்கன்றுகளை வளர்த்து வருகின்றன. அய்யலூர் வனச்சரக அலுவலர் கே.ராஜாமணி கூறியதாவது: வேடசந்தூர் தாலுகாவைச் சேர்ந்த அனைத்து விவசாயிகளும் இத்திட்டத்தின் கீழ் இலவசமாக மரக்கன்றுகளை பெறலாம்.

மரக்கன்று வளர்க்க விரும்பும் விவசாயிகள் பட்டா, ரேஷன் கா◌ார்டு நகல்களுடன், 2 போட்டோ கொண்டு வர வேண்டும். வனத்துறையினர் விவசாயிகளின் நிலத்தின் மண் வகையை ஆய்வு செய்து, தகுந்த மர வகைகளை வளர்க்க பரிந்துரை செய்வர். மரக்கன்றுகள் வளர ஏதுவான காலம் வந்ததும் வினியோகம் துவங்கும் என்றார். விவசாயிகள் அய்யலூர் வனச்சரக அலுவலகம் அல்லது 94869-49971 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம், என்றார்.

## திராட்சை ஆராய்ச்சி நிலையத்தில் வானிலை முன் அறிவிப்பு மையம்

கம்பம்:ஆனைமலையன்பட்டி திராட்சை ஆராய்ச்சிநிலையத்தில் வானிலை முன் அறிவிப்பு மையம் அமைக்கும் பணிகள் நடந்து வருகின்றன. ஆனைமலையன்பட்டி திராட்சை ஆராய்ச்சி நிலையத்தின் தலைவர் பார்த்திபன், பேராசிரியர் சுப்பையா ஆகியோர் கூறியதாவது:திராட்சை விவசாயிகளுக்கு முன்கூட்டியே வானிலை மாற்றங்களை அறிவிக்க திட்டமிட்டுள்ளோம். வீசும் காற்றின் வேகம், எந்த திசையில் இருந்து காற்று வீசுகிறது. எத்தனை மணிநேரம் அடித்தது போன்ற விபரங்கள் பதிவாகும். அதேபோல சூரிய ஒளியின் அளவு, மண்ணில் ஈரப்பதம் எவ்வளவு நேரம் இருக்கிறது, பாய்ச்சும் நீர் எவ்வளவு நேரத்தில் ஆவியாகி போகிறது உள்ளிட்ட பல்வேறு தகவல்கள் விவசாயிகளுக்கு வழங்க உள்ளோம். இதற்கென சுமார் ரூ. 30 லட்சம் மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீடு கோரப்படும்' என்றனர்.

## மானாமதுரையில் பருவமழை அதிகம் மகிழ்ச்சி

மானாமதுரை:சிவகங்கை மாவட்டத்தில் பெரும்பாலான பகுதிகள் வானம் பார்த்த பூமி தான். நெல், கரும்பு, வாழை, தென்னை பிரதான விவசாயம். அக்டோபர் முதல் டிசம்பர் வரை பெய்யும் வடகிழக்கு பருவ மழையை நம்பி விவசாய பணிகள் நடை பெறுகின்றன. வடகிழக்கு பருவ மழை மூலம் நிலத்தடி நீரும் அதிகரிக்கும். கண்மாய், குளம் போன்ற நீர் நிலைகளிலும் தண்ணீர் தேங்கும். மழையை நம்பி நடவு பணிகளை மேற்கொள்ளும் விவசாயிகள் பற்றாக் குறை விவசாயத்தை மோட்டார் பாசனம் மூலம் நிறைவு செய்கின்றனர்.

கடந்த 2011ம் ஆண்டு வட கிழக்கு பருவ மழை மூலம் மானா மதுரை வட்டாரத்தில் 485 மி.மீ., மழை கிடைத்தது. அந்தாண்டு மொத்தம் 872 மி.மீ.,மழை பெய்தது. அதன் பின் 2012ல் 457.4 மி.மீட்டரும், 2013ல்

340.8 மி.மீட்டரும் மழை பதிவானது. 2013ல் வடகிழக்கு பருவ மழை கைகொடுக்காததால் வறட்சி நிலவியது. நிலத்தடி நீர் மட்டம் வெகுவாக குறைந்ததால் மோட்டார் பாசன விவசாயமும் நடைபெறவில்லை. 2014ம் ஆண்டு வட கிழக்கு பருவ மழை கை கொடுத்தால் 5 ஆயிரத்து 600 எக்டேரில் நெல் பயிரிடப்பட்டு அதிக விளைச்சல் இருந்தது. பெரும் பாலும் தென் மேற்கு பருவ மழை ஜுன் முதல் செப்டம்பர் வரை பெய்யும். இந்தாண்டு இதுவரை 269.6மி.மீ., மழை பதிவாகி உள்ளது.

தென்மேற்கு பருவ மழையை நம்பி கேழ்வரகு, பருத்தி, மிளகாய், எள் பயிரிடப்படுகிறது. கடந்தாண்டு பெய்த வடகிழக்கு பருவ மழையால் நிலத்தடி நீர் மட்டம் சராசரி உயர்ந்துள்ள தாலும், ஈர நிலமாக இருந்த படியாலும் இந்தாண்டு பருத்தி, எள், மிளகாய் அதிகளவு பயிரிடப் பட்டுள்ளது. இன்னும் தென் மேற்கு பருவ மழை தொடர்ந்து பெய்ய வாய்ப்புள்ளதால் மிளகாய், பருத்தி விளைச்சல் அதிக மிருக்கும், மேலும் இந்தாண்டு இதுவரை 27 செ.மீ., மழை அளவு பதிவாகி உள்ளது. வடகிழக்கு பருவ மழை அக்டோபரில் இருந்து தொடங்கும் பட்சத்தில் கூடுதல் மழை பெய்ய வாய்ப்புள்ளது.இந்தாண்டு இன்னும் அதிக அளவில் விவசாயிகள் ஈடுபட வாய்ப்புள்ளது என வேளாண் அதிகாரிகள் தெரிவித்தனர்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**விதைநெல் நேர்த்தி மையங்களை அதிகப்படுத்த வேண்டும் தமிழக அரசுக்கு, ஜி.கே.வாசன் கோரிக்கை**



சென்னை,

தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஜி.கே.வாசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

2014–15–ம் ஆண்டில் ஒரு கிலோ நெல்விதைக்கு ரூ.33 வழங்கப்பட்டது. விவசாயத்திற்கு கூலி உயர்வு, உரம் உரிய நேரத்தில் வழங்கப்படாதது, உரவிலை உயர்வு, பூச்சித்தாக்குதல், பருவம் தவறிய தொடர் மழை போன்ற காரணங்களால் நெற்பயிரின் விளைச்சல் குறைந்து, மகசூல் பாதிக்கப்பட்டு விவசாயிகளுக்கு பெருத்த நஷ்டம் ஏற்பட்டது.

அறுவடைக்கு பின்பு அதை நேர்த்தி செய்யும்போது அதில் 100 சதவீதம் முளைப்புத்திறன் உள்ள நெல் மட்டுமே கொள்முதல் செய்யப்படும். அதே நேரத்தில் அதனை நேர்த்தி செய்யும் மையமும் குறிப்பிட்ட இடங்களில் மட்டுமே உள்ளது. குறிப்பாக விதைநெல்லை உற்பத்தி செய்யும் விதைப்பண்ணைக்கும், விதை நேர்த்தி மையத்திற்கும் இடையேயான தூரம் அதிகம். இந்த நேர்த்தி மையங்களில் நெல் தரத்தை உயர்த்த கருக்காய் நீக்கி சுத்தப்படுத்த வேண்டும். ஒரு கிலோ விதைநெல்லுக்கு குறைந்தபட்சம் ரூ.50 விலையாக தரவேண்டும். மேலும், விதைநெல் உற்பத்திக்கு ஆகும் செலவுக்கு போதுமான மானியம் வழங்கிட வேண்டும். மேலும், தரமான விதைநெல் இருந்தால் தான் நல்ல விளைச்சல் இருக்கும். எனவே தமிழக அரசு விதைநெல் நேர்த்தி மையங்களை அதிகப்படுத்தி அவற்றை விதைப்பண்ணைகளுக்கு அருகிலேயே அமைத்து தர வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**காட்பாடி பகுதியில் பாசன கால்வாய் மீது இருந்த ஆக்கிரமிப்புகள் அகற்றம் மாநகராட்சி அதிகாரிகள் நடவடிக்கை**



காட்பாடி பகுதியில் பாசன கால்வாய் மீது இருந்த ஆக்கிரமிப்புகளை மாநகராட்சி

அதிகாரிகள் அகற்றினர். பாசன கால்வாய்

வேலூர் மாநகராட்சி பகுதிகளில் புதிய பஸ் நிலையம், பழைய பஸ் நிலையம் உள்ளிட்ட அனைத்து பகுதிகளிலும் உள்ள ஆக்கிரமிப்புகளை மாநகராட்சி அதிகாரிகள் அகற்றி வருகின்றனர். மேலும் மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் ஆக்கிரமித்து உள்ளதை மாநகராட்சி அதிகாரிகள் கண்டறிந்து அகற்றி வருகின்றனர். இந்த நிலையில் ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்ட பாசன கால்வாய் காட்பாடி, காங்கேயநல்லூர், விருதம்பட்டு பகுதிகளில் ஆக்கிரமிக்கப்பட்டு இருந்தது. இதனால் மழைநீர் பாசன கால்வாயில் செல்லாமல் வீணாக வெளியேறி வந்தது.

அதைத்தொடர்ந்து மாநகராட்சி அதிகாரிகள் வரைபடங்களை வைத்து பார்த்தபோது பாசன கால்வாய் மீது சுமார் 5 கிலோ மீட்டர் தொலைவுக்கு ஆக்கிரமிப்புகள் செய்யப்பட்டு இருப்பது தெரிய வந்தது. மேலும் இந்த இடத்தில் பயிர்கள் பயிரிடப்பட்டும் இருந்தன.

ஆக்கிரமிப்புகள் அகற்றம்

இந்த நிலையில் மாநகராட்சி கமிஷனர் ஜானகி உத்தரவின் பேரில், 1–வது மண்டல உதவி ஆணையர் மதிவாணன் தலைமையில் மாநகராட்சி ஊழியர்கள் மாநகராட்சியில் உள்ள 13, 14, 15 ஆகிய வார்டுகளில் பாசன கால்வாய் மீது இருந்த ஆக்கிரமிப்புகளை பொக்லைன் எந்திரம் மூலம் அகற்றினர். சுமார் 5 கிலோ மீட்டர் தொலைவுக்கு விருதம்பட்டு முதல் காங்கேயநல்லூர், பிரம்மபுரம் வரை ஆக்கிரமிக்கப்பட்டு இருந்த பாசன கால்வாய் மீது இருந்த ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டன.

பாசன கால்வாய் மீது நெல், கேழ்வரகு போன்ற பயிர்கள் பயிரிடப்பட்டு இருந்தன. நிலத்தின் உரிமையாளர்களிடம் கூறி பயிர்களை அகற்றிய பின்னர் இந்த ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

**ஒழுங்குமுறை விற்பனை கூடத்திற்கு மக்காச்சோளம் வரத்து அதிகரிப்பு**



கள்ளக்குறிச்சி,

கள்ளக்குறிச்சி ஒழுங்குமுறை விற்பனை கூடத்திற்கு மக்காச்சோளம் வரத்து நேற்று அதிகரித்து காணப்பட்டது.

ஒழுங்குமுறை விற்பனை கூடம்

கள்ளக்குறிச்சியில் உள்ள ஒழுங்குமுறை விற்பனை கூடத்திற்கு தியாகதுருகம், ரிஷிவந்தியம், சின்னசேலம், கச்சிராயப்பாளையம் உள்ளிட்ட பல்வேறு பகுதியில் இருந்து விவசாயிகள் தங்கள் விளைநிலங்களில் விளையும் தானியங்களை விற்பனைக்கு கொண்டு வருகின்றனர். அந்தவகையில் வழக்கமாக கள்ளக்குறிச்சி ஒழுங்குமுறை விற்பனை கூடத்திற்கு 200 முதல் 300 மூட்டைகள் மக்காச்சோளம் வருவது வழக்கம். ஆனால் நேற்று 450 மூட்டை மக்காச்சோளம் வந்திருந்தது. 100 கிலோ எடைகொண்ட ஒரு மூட்டை மக்காச்சோளமானது ரூ.1,373–க்கு விற்பனையானது.

இதேபோல் 500 மூட்டை எள், 15 மூட்டை கம்பு, 5 மூட்டை உளுந்து உள்பட மொத்தம் 880 மூட்டைகள் வந்திருந்தன. இதனை

வாங்குவதற்காக விழுப்புரம், விருதுநகர், ஈரோடு உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்து ஏராளமான வியாபாரிகள் வருகை தந்து விவசாயிகளின் விளைபொருட்களை போட்டி போட்டு வாங்கி சென்றனர்.

ஒரு மூட்டை (80 கிலோ) எள் ரூ.5 ஆயிரத்து 799–க்கும், ஒரு மூட்டை (100 கிலோ) உளுந்து ரூ.8 ஆயிரத்து 59–க்கும் என மொத்தம் ரூ.34 லட்சத்திற்கு விற்பனையானது.

தினகரன்

**குறைவான பருவமழை சவால்களை வாய்ப்பாக மாற்ற வேண்டும் : நீர்ப்பாசன முறைகளை மேம்படுத்த பிரதமர் மோடி ஆலோசனை**




புதுடெல்லி: குறைவான பருவமழை என்ற சவாலை, வாய்ப்பாக பயன்படுத்திக் கொண்டு புதிய நீர்ப்பாசன வசதிகளை, வாய்ப்புகளைக் கண்டறிந்து பயன்படுத்த வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடி ஆலோசனை கூறினார். நடப்பு பருவமழை காலத்தில் 93 சதவீதம் (இயல்பு நிலை) இருக்கும் என்று இந்திய வானிலை ஆராய்ச்சி நிலையம் அறிவித்திருந்தது. இதனிடையில் இது 88 சதவீதமாக (பற்றாக்குறை) இருக்கும் என்று திருத்திய அறிக்கையை கடந்த வாரம் வெளியிட்டது.

பருவமழை குறைவாக பெய்யும், பற்றாக்குறை ஏற்படும் என்ற நிலையில் விவசாய உற்பத்தி குறித்த அச்சம் எழுந்தது.

தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக வறட்சி ஏற்படக் கூடும் என்றும் விவசாயிகள் இடையே அச்சம் ஏற்பட்டது. இந்த நிலையில் பருவமழை குறைந்தால் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து பிரதமர் நரேந்திர மோடி நேற்று ஆலோசனை நடத்தினார். மத்திய நீர்வளத் துறை அமைச்சர் உமா பாரதி, ஊரக மேம்பாட்டுத் துறை அமைச்சர் சவுத்ரி பீரேந்திர சிங், வேளாண் துறை இணையமைச்சர் சஞ்சய் பால்யன் மற்றும் வேளாண், நீர்வளத்துறை, ஊரக மேம்பாடு, நிதி, நிதி ஆயோக், பிரதமர் அலுவலக உயரதிகாரிகள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். இது குறித்து பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்தியில் கூறப்பட்டுள்ளதாவது: ஆலோசனைக் கூட்டத்தில் பருவமழை பொய்த்தால் அதை எப்படி எதிர்கொள்வது என்று பிரதமர் நரேந்திர மோடி கேட்டறிந்தார். பின்னர் அவர், அதிகாரிகளுக்கு சில உத்தரவுகளை பிறப்பித்தார். கூட்டத்தில் பிரதமர் கூறியதாவது: குறைவான பருவமழை என்ற சவாலை, வாய்ப்பாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இது போன்ற நேரத்தில் நீர்ப்பாசன முறையில் மேற்கொள்ள வேண்டிய மாற்றங்கள், இருக்கும் ஆதாரங்களை முழுமையாக எப்படி பயன்படுத்திக் கொள்வது என்பது குறித்து விரிவாக ஆராய வேண்டும். உடனடி நடவடிக்கையாக, விளைநிலங்களில் தாற்காலிக குளங்கள் அமைத்து, கிடைக்கும் நீரை சேமித்து வைக்க விவசாயிகளுக்கு அறிவுரை கூற வேண்டும்.

ஒவ்வொரு பகுதியில் உள்ள நிலத்தடி நீர் நிலைமை, பருவமழை கணிப்புகள் ஆகியவற்றின் அடிப்படையில் பயிர் வகைகளைத் தேர்ந்தெடுத்து பயிர் செய்திட வேண்டும். ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் இதற்கான வழிமுறைகளை வகுத்துத் தர வேண்டும். புதிய நீர்ப்பாசன

வசதிகள் குறித்தும், தற்போதுள்ள நீராதாரத்தை முழுமையாக எப்படி பயன்படுத்திக் கொள்ளலாம் என்பது குறித்தும் ஆராய்ந்து, தகுந்த அறிவுரைகளை விவசாயிகளுக்கு அளிக்க வேண்டும். அவசர காலத்தில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் தற்போதே மாவட்ட அளவில் முடிவு செய்திட வேண்டும் என அரசு அறிக்கையில் ெதரிவிக்கப்பட்டுள்ளது.

## ஐ.டி.சி, ஜி.எஸ்.கே, ருச்சி உள்ளிட்ட பல நிறுவனங்களின் 'பாஸ்ட் புட்கள்' ஆய்வு




புதுடெல்லி: மேகி நூடுல்சின் தரத்தில் ஏற்பட்ட சிக்கலைத் தொடர்ந்து, ஐ.டி.சி, ஜி.எஸ்.கே, ருச்சி உள்ளிட்ட பல நிறுவனங்களின் பாஸ்புட்களான நூடுல்ஸ், பாஸ்தா மற்றும் மேக்ரோனி ஆகியவற்றையும் ஆய்வு செய்ய மத்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தரக்கட்டுப்பாடு ஆணையம் நேற்று உத்தரவிட்டுள்ளது. மேலும், இந்த வகை பாஸ்ட் புட்களையும், அதன் டேஸ்ட் மேக்கர்களில் கலக்கப்பட்ட உப்புக்கள் நிர்ணயிக்கப்பட்ட அளவில் உள்ளதாக என ஆராயவும் உணவு பாதுகாப்பு தர ஆணையம் ஆணை பிறப்பித்துள்ளது. நெஸ்லே இந்தியா நிறுவனம் தயாரித்த நூடுல்சில் நிர்ணயிக்கப்பட்ட அளவுக்கும் அதிகமாக காரியம் மற்றும் மோனோசோடியம் குளுடோமேட் எனும் வேதிப்பொருள்கள் கலந்திருப்பது பல மாநிலங்கள் நடத்திய ஆய்வில்

கண்டுபிடிக்கப்பட்டது. இதையடுத்து, 14-க்கும் மேற்பட்ட மாநிலங்களில் மேகி நூடுல்ஸ் விற்பனைக்கு தடை விதிக்கப்பட்டது. மேலும், மேகி நூடுல்சின் 9 ரகங்களையும் திரும்பப் பெற மத்திய உணவு பாதுகாப்பு ஆணையம் உத்தரவிட்டது. மாநிலங்களுக்கு கடிதம்: இந்நிலையில், மேகி நூடுல்ஸின் தரத்தை மட்டும் ஆய்வு செய்ததோடு மட்டுமல்லாமல், மற்ற நிறுவனங்களின் பாஸ்ட் புட்களின் தரத்தையும் சோதிக்க உணவுப் பாதுகாப்பு தர ஆணையம் முடிவு செய்துள்ளது. இது தொடர்பாக மத்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தரக்கட்டுபாடு ஆணையத்தின் தலைமை நிர்வாக அதிகாரி ஒய்.எஸ். மாலிக் அனைத்து மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களின் உணவுப்பாதுகாப்பு ஆணையர்களுக்கும் கடிதம் எழுதியுள்ளார். அந்த கடிதத்தில் ஒய்.எஸ். மாலிக் எழுதியிருப்பதாவது, மேகி நூடுல்சின் தரம் குறித்து பல்வேறு ஆய்வுகள் செய்யப்பட்டன. அதேபோல, மற்ற நிறுவனங்கள் தயாரிக்கும் துரித வகை உணவுகளிலும், மனித உடல்நலத்திற்கு தீங்கு விளைவிக்கும் வேதிப்பொருள்கள் கலந்திருக்கலாம் எனஅச்சம் ஏற்பட்டுள்ளது.

உணவுக்கட்டுப்பாடு துறை மூலம் அனுமதி வழங்கப்பட்டு தற்போது விற்பனையில் இருக்கும் பாஸ்ட் புட்களின் மாதிரிகளை அரசு அங்கீகரிக்கப்பட்ட ஆய்வுக்கூடங்களுக்கு அனுப்பி ஆய்வு செய்ய மாநிலங்களுக்கு அறிவுரை செய்கிறோம். இந்த அறிக்கையை வரும் 19ம் தேதிக்குள் மத்திய உணவு தரக்கட்டுப்பாடு ஆணையத்துக்கு அனைத்து மாநிலங்களும் அளிக்க வேண்டும். அதன்படி, ஆய்வில் அரசின் நிர்ணயிக்கப்பட்ட அளவைக் காட்டிலும் தாது உப்புகள் அளவு அதிகரித்திருந்தால், உணவு பாதுகாப்பு சட்டம், மற்றும் குற்றவியல் சட்டத்தின் கீழ் மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்கலாம் என்று அந்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செயற்கை வண்ணங்கள்?: மேலும், உணவுப்பாதுகாப்பு அமைப்பின் அங்கீகாரமற்ற பொருட்கள் ஆய்வின் போது கண்டுபிடிக்க நேர்ந்தால்

அந்த பொருட்களை தயாரிக்கும் நிறுவனத்தின் மீது வழக்கு பதிந்து, பொருட்களை சந்தையிலிருந்து திரும்பப் பெற்று, அழிக்கவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல், ஆய்வில் பொதுவான தரச் சோதனைகள் மட்டுமின்றி, செயற்கை வண்ணங்கள், உலோகங்களான காரியம், செம்பு, காட்மியம், ஆர்சனிக் ஆகிய பொருட்கள் கலந்திருக்கிறதா எனஆய்வு செய்யவும் மாநில தரக்கட்டுப்பாடு ஆணையர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

நிறுவனங்கள் பட்டியல்: இந்த கடிதத்தின் குறிப்பிட்டுள்ளபடி நெஸ்லே இந்தியா, ஐ.டி.சி, இந்தோ நிசின் புட் லிமிட், ஜி.எஸ்.கே கன்சூமர் ஹெல்த்கேர், சி.ஜி.புட்ஸ் இந்தியா, ருச்சி இன்டர்நேசனல், மற்றும் ஏ.ஏ. நியுட்ரீசின் லிமிட் ஆகிய நிறுவனங்கள் தயாரிக்கும் பாஸ்ட்புட்களான நூடுல்ஸ், பாஸ்தா, மேக்ரோனி உள்ளிட்ட பொருட்களின் மாதிரிகள் ஆய்வு செய்யப்படவுள்ளது.

ஆய்வுக்கான பொருட்கள்

சி.ஜி புட்ஸ் நிறுவனம் தயாரிக்கும் 'வெய், வெய் நூடுல்ஸ்', 'புஜியா சிக்கன் ஸ்நாக்ஸ் பொருட்கள்', ருச்சி நிறுவனத்தின் 'கோக்கா நூடுல்ஸ்', ஜி.எஸ்.கே நிறுவனத்தின் 'பூடுல்ஸ்', நெஸ்லே இந்தியாவின் 9 வகை நூடுல்ஸ்கள், இந்தோ நிசின் நிறுவனத்தின் 'டாப்ரேமன் ஆட்டா மசாலா', ஐ.டி.சியின் 3 வகை நூடுல்ஸ்கள், ஏ.ஏ. நியூட்சிரியனின் 'யம்மிசிக்கன்' மற்றும் 'வெஜிடேரியன் நூடுல்ஸ்'ஆகியவைகள் ஆய்வு செய்யப்படவுள்ளன என்று மத்திய உணவுப்பாதுகாப்பு தரகட்டுப்பாடு அமைப்பு அதிகாரப்பூர்வமாக தெரிவித்துள்ளது. இது குறித்து சி.ஜி புட்ஸ் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி ஜி.பி.ஷாவிடம் கேட்டபோது, மத்திய உணவுப்பாதுகாப்பு தரக்கட்டுப்பாடு ஆணையத்தின் அனைத்து ஆய்வுகளுக்கும் உட்படுத்தப்பட்டு எங்களது பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன. அதிகாரிகள் மேற்கொள்ளும் அனைத்தும் ஆய்வுகளுக்கும் தேவைப்பட்டால், நிறுவனம் ஒத்துழைக்கும் என்றார்.

**கேரளாவில் பருவமழை தீவிரம் : 4 நாட்கள் கனமழை எச்சரிக்கை**




திருவனந்தபுரம்: கேரளாவில் பருவமழை தீவிரமடைந்துள்ளது. அடுத்த 4 நாட்களுக்கு கேரளாவில் கனமழை பெய்யும் என்று திருவனந்தபுரம் வானிலை ஆராய்ச்சி மையம் அறிவித்துள்ளது. கேரளாவில் தென்மேற்கு பருவமழை வழக்கத்தை விட 4 நாள் தாமதமாக கடந்த 5ம் தேதி தொடங்கியது. கடந்த 2 நாட்களாக கேரளாவின் தெற்கு மற்றும் மத்திய பகுதிகளில் கனமழை பெய்து வருகிறது. நேற்று காலை முதல் வட கேரளாவிலும் மழை பெய்யத் தொடங்கியுள்ளது. நேற்று காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணிநேரத்தில் சேர்த்தலா மற்றும் காயங்குளத்தில் அதிகபட்சமாக 8 செ.மீ. மழை பெய்துள்ளது. கண்ணூர், குன்னங்குளத்தில் 7 செ.மீ., செங்கணூர், பொன்னானி, திருவனந்தபுரம் விமானநிலையம் ஆகிய இடங்களில் தலா 6 செ.மீ., திருவனந்தபுரம் நகரம், ஆலப்புழா, ஹரிப்பாடு ஆகிய இடங்களில் தலா 5 செ.மீ. மழை பெய்துள்ளது. கேரளாவில் அடுத்த 4 நாட்களுக்கு கனமழை பெய்யும் என்று திருவனந்தபுரம் வானிலை ஆராய்ச்சி மையம் அறிவித்துள்ளது.

**மேட்டூர் நீர்மட்டம் 74 அடியை எட்டியது**




மேட்டூர்: காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் கடந்த சில நாட்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. இதனால் மேட்டூர் அணைக்கு 5 ஆயிரம் கனஅடிக்கும் அதிகமாக தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. நேற்று முன்தினம், வினாடிக்கு 5970 கனஅடி வீதம் வந்த நீர்வரத்து, நேற்று 5981 கனஅடியானது. அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக வினாடிக்கு 2 ஆயிரம் கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்படுகிறது. திறப்பை விட, நீர்வரத்து அதிகளவில் உள்ளதால், மேட்டூர் அணையின் நீர்மட்டம் தொடர்ந்து உயர்ந்து வருகிறது. இதனால், நேற்று முன்தினம் 73.62 அடியாக இருந்த அணையின் நீர்மட்டம், நேற்று 73.98 அடியாக உயர்ந்தது.

அறிவியல் ரீதியில் கால்நடை வளர்ப்பு இலவச பயிற்சி விண்ணப்பிக்க அழைப்பு

கரூர், : கரூர் பண்டுதகாரன்புதூர் கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய தலைவர் முனைவர் அகிலா விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது: பண்டுதகாரன்புதூரில் அமைந்துள்ள கால்நடை பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய வளாகத்தில், இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் ஊரக தொழில் முனைவோர்

பயிற்சி மையத்தின் நிதியுதவியுடன், லாபகரமான கால்நடை பண்ணையம் பயிற்சி வரும் 15ம்தேதி முதல் 20ம்தேதி வரை 6நாட்களுக்கு இலவச பயிற்சி அளிக்கப்படவுள்ளது.
இதில் அறிவியல் ரீதியில் கறவைமாடு வளர்ப்பு, ஆடுவளர்ப்பு, கோழிவளர்ப்பு, பன்றி வளர்ப்பு, ஆகியவற்றில் முக்கிய பங்களிக்கும் பராமரிப்பு முறைகளான இனங்களை தேர்வு செய்வது, பண்ணை வீட்டமைப்பு, தீவன மேலாண்மை, கால்நடை மற்றும் கோழிகளை தாக்கும் நோய்கள், அவற்றை தடுக்கும் முறைகள், மூலிகை மருத்துவ சிகிச்சை முறைகள், விற்பனை உத்திகள், வங்கி கடன் உதவி, பண்ணைக்கான காப்பீடு, பண்ணை பொருளாதாரம், ஆகிய தலைப்புகள் பசுந்தீவன உற்பத்தி, பதப்படுத்துதல், கலப்பு தீவனம் தயாரித்தல், அசோலாவளர்ப்பு, தூய்மையான பால்உற்பத்தி, பால்பொருட்கள் தயாரிப்பு, மண்புழு உரம் தயாரித்தல், சாண எரிவாயு உற்பத்தி ஆகிய தலைப்புகள் குறித்து பல்கலைக்கழக பேராசிரியர்களால் நடத்தப்பட உள்ளது.
பயிற்சியில் கலந்துகொள்ள ஆர்வம் உள்ளவர்கள் அலுவலக தொலைபேசி 04324-284335, தொடர்பு கொண்டு விரைந்து முன்பதிவு செய்துகொள்ள வேண்டும்.

தென்னை மரங்களில் சாம்பல், பேரான் சத்துப் பற்றாக்குறைபோக்கும் முறை குறித்து வழிகாட்டல்

சேதுபாவாசத்திரம், : தென்னையில் காணப்படும் சாம்பல் சத்து மற்றும் போரான் சத்து பற்றாக்குறையை போக்கும் வழிமுறைகள் பற்றி சேதுபாவாசத்திர வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் பெரியசாமி விளக்கமளித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: தென்னைக்கு மற்ற சத்துக்களை விட சாம்பல் சத்துதான் மிக அதிகமாக தேவைப்படுகிறது. இந்த சத்து குறைந்தால் தேங்காய் அளவு சிறுத்து, எண்ணிக்கையும் குறைந்து விடும்.

மேல் இலைகள் பசுமையாக இருந்தாலும் அடி இலைகளில் வெளிர்பச்சை நிற புள்ளிகள் தோன்றி மஞ்சள் நிறமடைந்து பின்னர் பழுப்பு நிறமடையும் இலைகள் கீழ்நோக்கி தொங்க தொடங்கும்.

முதிர்ச்சி அடையும் முன்பே இலைகள் உதிர்ந்து விடும் இக்குறைபாட்டை போக்குவதற்கு 5 வருடங்களுக்கு மேல் வயதுடைய தென்னைமரத்திற்கு ஒரு வருடத்திற்கு 50 கிலோ நன்கு மக்கிய தொழுஉரத்துடன் யூரியா 1.300 கிலோ, சூப்பர் பாஸ்பேட் 2 கிலோ, பொட்டாஷ் 3.500 கிலோ உரங்களை கலந்து மரத்தடியில் இருந்து 5 அடி தள்ளி வட்டமாக உரமிட்டு மண்வெட்டியால் உரத்தை மண்ணுடன் கலந்து பிறகு நீர்பாய்ச்ச வேண்டும். மேற்கண்ட உரத்தை இரண்டாக பிரித்து ஜூன் ,ஜூலை மாதத்திலும், டிசம்பர், ஜனவரி மாதத்திலும் இரண்டு முறையாக பிரித்து இட வேண்டும். பொட்டாஷ் உரம் 2 கிலோவிற்கு பதிலாக 3.500 கிலோ இடுவதினால் தென்னையை தாக்கும் ஈரியோபைட் சிலந்தி கட்டுப்படுத்தப்படுகிறது. போரான்சத்து பற்றாக்குறை ஏற்பட்டால் இளம் கன்றுகளில் இலை பிரியாமல் இருக்கும். வளரும் குருத்து இலைகள் வளர்ச்சி குன்றி இலைகள் பிரியாமல் இருக்கும். பாலையில் இளம் பிஞ்சுகள் காய்ந்து கருப்பாக காணப்படும். குரும்பைகள் அதிகமாக கீழே உதிரும். வெற்றுத் தேங்காய்கள் மற்றும் ஒல்லிக்காய்கள் தோன்றும். தேங்காய்களில் வெடிப்புகளும், நீளமான எடை குறைந்த தேங்காய்கள் தோன்றும். இக்குறைகளை போக்கிட நன்கு வளர்ந்த தென்னைமரத்திற்கு ஆண்டுதோறும் ஒரு மரத்திற்கு ஒரு கிலோ வீதம் தென்னை நுண்ணூட்ட சத்து உரத்தினை இட வேண்டும் அல்லது தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் தயாரிப்பான தென்னை ஊட்டச்சத்துகரைசல் (தென்னை டானிக்) மரம் ஒன்றுக்கு 200 மில்லி வீதம் 6 மாதத்திற்கு ஒரு முறை வேர்மூலம் செலுத்த வேண்டும். இந்த வழிமுறைகளை கடைப்பிடித்து தென்னையில் விவசாயிகள் அதிக மகசூல் பெறலாம். இவ்வாறு அவர் அந்த செய்திக் குறிப்பில் கூறியுள்ளார்.

**நாட்டு கோழிப்பண்ணை அமைக்க விவசாயிகள் விண்ணப்பிக்கலாம் 50 சதவீதம் மானியம்**

நாகை, : நாகை மாவட்டத்தில் நாட்டுக்கோழிப்பண்ணை அமைக்க ஆர்வமுள்ள விவசாயிகள் விண்ணப்பிக்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. நாகை மாவட்டத்தில் கோழியின மேம்பாட்டுத்திட்டத்தின்கீழ் கடந்த 2012-13ம் ஆண்டில் 35 பயனாளிகளுக்கும், 2013-14ம் ஆண்டில் 240 பயனாளிகளுக்கும், 2014-15ம் ஆண்டில் 160 பயனாளிகளுக்கும் கோழிக்குஞ்சுகள் வழங்கப்பட்டுள்ளன. தற்போது 2015-16ம் ஆண்டில் ரூ.1.29 லட்சம் மதிப்பில் 160 பயனாளிகளுக்கு வழங்கப்பட உள்ளது. இதில் 50 சதவீதம் மானியம் வழங்கப்படும். இத்திட்டத்தில் கோழிக்கொட்டகை அமைக்க, குஞ்சு, தீவனம், உபகரணங்கள் வாங்க முதல் தவணையாக 25 சதவீத மானியத் தொகை ரூ.32,375 மாநில அரசால் வழங்கப்படும்.

இத்திட்டத்தின் இறுதியில் 25 சதவீத மானியத்தொகை (ஆதிதிராவிடர்களுக்கு 33 சதவீதம் மானியம்) நபார்டு வங்கி மூலமாக வழங்கப்படும். 2வது தவணை கோழிக் குஞ்சுகள் வளர்க்க ஊக்கத்தொகையாக ரூ.3125க்கும், மூன்றாவது தவணை கோழிக்குஞ்சுகள் வளர்க்க ஊக்கத் தொகையாக ரூ.1875க்கும் தமிழ்நாடு அரசு கால்நடை பராமரிப்பு துறையால் வழங்கப்படும். நாட்டுக்கோழிப்பண்ணை அமைக்க ஆர்வமுள்ள விவசாயிகள், கால்நடை பராமரிப்பு துறை அல்லது அவர்களது குடியிருப்பு பகுதியை சேர்ந்த தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள், கூட்டுறவு வங்கிகள் மூலமாக விண்ணப்பிக்கலாம்.

பயனாளிகள் கடன் பெற தகுதியான நபர்களாக இருப்பது அவசியம். ஆர்வமுள்ளவர்கள் கால்நடை பராமரிப்பு துறை அல்லது அவர்களது

குடியிருப்பு பகுதியை சேர்ந்த தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள், கூட்டுறவு வங்கிகள் மூலமாகவோ அல்லது தங்கள் கிராமத்திற்கு அருகில் உள்ள கால்நடை மருந்தக, கால்நடை உதவி மருத்துவர் மூலமாகவோ வருகிற 10ம்தேதி முதல் 30ம்தேதி வரை விண்ணப்பிக்கலாம் என கலெக்டர் அலுவலக செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.